உ

சிவமயம்.

கர்ப்போபநிடதம்.

——:(0):——

இஃது

யசுர்வேதத்தின் ஒரு சாகையின் இறுதியிலுள்ளது

மூலபாடம் பொழிப்புரை

விசேஷ வுரைகளுடன்

—(*)—

சிதம்பரம் பிரம்மவித்தியா பத்ராதிபரான

பரசமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

பிரம்மஸ்ரீ

கு. ஸ்ரீநிவாசதீக்ஷிதரவர்களால்.

——(*̤*)——

வடமொழியிலியற்றப்பட்ட

கர்ப்போபநிடதவிவரணம்

என்னும் வியாக்கியானத்துக்கிணங்க

அவர்களாலேயே தமிழில்மொழிபெயர்க்கப்பட்டு,

தமது

(நடுக்காவேரி)ஜகத்குருயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1899 ௵

இதன் விலை

ஶ்ரீமஹாபாரதீயவசநாநாமநுக்ரமணிகா ।

——(*)——

வசநாநி	அத்யாய:	ஶ்லோக:
அக்ருத்வா பரஸந்தாபம்	௪௮	௩
அயஶோ விஷயஜ்ஞஸ்ய	௨௰	௧௫
அநபாயி ஸுக்ஷேத்ரம்	௮௮	௨௫
அநார்யா நார்யஸம்பந்நா	௩௬	௨௬
அவிஜ்ஞாய ப்ரயோக்தாரம்	௫௭	௨௪
அஸத்யவசநம் ப்ராஹு:	௧௫	௧௩
அஹந்யஹநி பூதாநி	௮௰	௧
இதி வேதவ்யாஸவாக்யம்	௯௫	௩
ஈஶ்வரம் ஸர்வலோகஸ்ய	௫௭	௨௰
உத்யோகோ ஹி நாம	௬௧	௧௬
உபகாரம் க்ருதம்	௨௨	௪
ஊர்த்வபாஹுர்விரௌம்யேஷ	௧௮	௨௬
ருதம் ச ஸத்யம்	௯௪	௧௯
ஏஷ தர்மோ ஸநாதந:	௪௬	௰
ஏகோ தர்ம: பரம் ஶ்ரேய:	௪௭	௧௫
ஐஶ்வர்யமதமத்தோ	௪௫	௧௪
கர்மணா மநஸா வாசா	௫௯	௧௭
காமக்ரோதௌ ஹி	௪௫	௨௪
காலோ ஹி பலவாந்	௬௭	௩
கிம் ஜ்ஞாநேந	௮௧	௯
க்ருதே தர்மோ	௧௬	௰
க்ஷமா தர்ம: க்ஷமா யஜ்ஞ:	௮௯	௧௯
க்ஷமாவதாம்	௬௩	௨௭
க்ஷமா ப்ரஹ்மம்	௭௩	௧௧
க்ஷமாவதோ	௮௬	௨௪
க்ஷத்ரியஸ்ய	௬௯	௧௨

தஸ்யாஸாக்ஷாத்ஜாதம்	ருசா	கஉ
தஸ்யைவ ப்ரதக்ஷிண ப்ரஸ்ய	எஎ	க
தஞ்சோயோமேசநாயக	அசு	உரு
தஸ்யப்ரயாணம்த்ரிசத்யம்	சஉ	கரு
தாம்ப்ரம்ஹ்யியஸ்திதேஹ	அரு	கசா
தீர்த்திவெகுஸீமானி	சாரு	கசு
த்ருதிஸம்தாநந்தாந்ர:	சா அ	உஅ
பிஜஜாதம்	கூசு	எ
நமோஸ்வேஜாதவம்	சாக	க
நாநாயோநி	சுரு	க
நாஸ்திகேநதயம்	ருசா	கஅ
நிஷ்ப்த்தபஸேஹமாநாவாக்ஷ:	சுஅ	உக
ஸம்ஸாரார்ணவஸ்தீவெயர்:	ருஎ	உரு
ஸம்ஸாரக்ஷயம்ஸம்ஸயம்	கஉ	கக
ஸம்ஸாரக்ஷலெதேயம்:	சுய	கஉ
ப்ரஜாபதிகதேசக்ரமெ	உசு	க
ப்ராணாயாமதஸ்யாதேய	ருசா	சசு
பாவஜாஸம்பூர்தி	சுசு	கஅ
பைஸ்ம்வேதீம்வர்ஷத்ர	எய	உசு
பைஸப்ரபைஸ்ரதி	கஅ	க
ஹதிவஸம்வாதகத்தி	சுரு	ரு
ஹரிவம்ஸமந்நாக	சாய	கரு
மாக்ரஸ்தேகம்பக:	ருரு	உய
மேஹேதிதேகே	ருசு	சா
யதிவோநம்பாஜ்மேவப்ராதி	சுசு	உசா
யதிவோநம்பாஜ்மேவப்ராதி	ருக	கரு
யதிவோநம்பாஜ்மேவேதயம்	ருஉ	சுசு

[illegible]	௫௪	௰
[illegible]	௫௰	௨௮
[illegible]	௮௨	௨௫
[illegible]	௧௧	௨௫
[illegible]	௮௨	௯
[illegible]	௩௩	௨௨
[illegible]	௩௩	௰
[illegible]	௨௯	௧௪
[illegible]	௩௧	௧௨
[illegible]	௨௧	௩
[illegible]	௧௭	௭
[illegible]	௧௬	௨௩
[illegible]	௨௪	௩
[illegible]	௧௬	௨௰
[illegible]	௧௬	௧
[illegible]	௬௬	௨௬
[illegible]	௬௭	௨௩
[illegible]	௩௰	௧
[illegible]	௪௧	௧
[illegible]	௮௭	௨௭
[illegible]	௫௮	௩
[illegible]	௮௩	௨௫
[illegible]	௪௭	௧
[illegible]	௭௰	௩

கர்ப்போபநிடத விஷயானுக்கிரமணி.

—:(0):—

உபநிஷத்வித்யா

கர்ப்போபநிடதவிஷயானுக்கிரமணி

முற்றிற்று

உ

சிவமயம்.

கர்ப்போபனிடதத்தின்

முகவுரை.

கர்ப்போபநிஷத்து என்பது கிருஷ்ணயஜுர்வேதத்தின் எண்பத்தாறு சாகைகளிலொன்றைச் சேர்ந்தது. இஃது கர்ப்பத்திதியைப்பற்றி விசேஷமாய் நிரூபிப்பதால் இதனை கர்ப்போபநிடதமெனப் பேரிட்டழைப்பது வழக்கம். இதற்கு சாகையாலும் மந்திரத்தைக் கண்ட மஹரிஷியின் பெயராலும், அமைந்த பெயர் பைப்பலாதமென்பது. பைப்பலாதம் மோட்சசாஸ்திரம் இறுதியிலுபசங்கரிக்கப்படுதலால். பிப்பலாதரென்ற மஹரிஷி ததீசியென்ற பரமசாம்பவ மஹரிஷியின் புத்திரரென்றும், அவரும் சிறந்த சிவபக்தரென்றும் ஸ்ரீவாய்சம்பபுராணம் அவரைப்பற்றிச் சொல்லியிருக்கின்றது. இவர் அதர்வசிகை சரபோபநிடதம், முண்டகம் முதலிய எண்ணுபநிடதங்களுக்கும் ரிஷியாயுள்ளவர். அதர்வா என்றமஹரிஷியின் புத்திரர் ததீசியாமுனிவரென்று வேதங்களிற் பலவிடங்களிற் காணப்படுகின்றமையாலும், முண்டகம் முதலிய உபநிடதங்களில் இம்முனிவரைச் சிறப்பித்தமையாலும், இவர் அதர்வண வேதியராதல் உசிதம்பற்றி இக்கர்ப்போபநிடதத்தைக் கண்ட பிப்பலாத மாமுனிவர் அதர்வவேதியராதலால் வேறென்றெனச் சங்கிக்கலாம். ஆனாலும், அவரே என்பதற்கு ஏற்கக்கூடிய இருவகைக்காரணங்களை எடுத்துக்காட்டுவோம். வேதாந்தங்கள் சமஸ்தசாஸ்திரங்களுக்கும் மூலமாதலால் அறுவகைத்தாதுக்களையமைத்து தனுவை சரீரநிருபணஞ்செய்து அதனிடத்தே ஆன்மாக்களுக்கு வைராக்கியம் தோன்ற அவர்விடேயின் வழியைக்காட்டி உண்மையறிந்துய்த்திட இவ்விதத்தையெழுந்ததென்பது எவருக்

குமொரப்பமுடிக்க விஷயமாதலால் ஆயுர்வேதத்துக்கு இது
மூலமாயிற்று. ஆயுர்வேத சித்தபரம்பரையில் "ப்ரஹ்மா
ஸ்ருஷ்டவாநாயுர்வேதம் உபவேதமதர்வணாம்॥ — ப்ரம்
மதேவன் அதர்வணவேதத்துக்குபவேதமாக ஆயுர்வேதத்
தைக்கண்டுபிடித்தது என்றதோர்வசனம் வழங்கப்பட்டுவரு
தலால் ஆயுர்வேதமூலபூதமான இவ்வுபநிடதத்தை அதர்வ
ணவேதத்துக்கு மூலபுருஷரான அதர்வமஹாரிஷியின்பேர
த்திரர்கண்டாரென்பதுசிதமே. மஹாபாரதம் சாந்திபர்வ
த்தில் "ஆயுர்வேதோ தநுர்வேதோ காந்
தர்வஸ்ச வேதத்ரயம்| — ஆயுர்வேதம், தநுர்வேதம், கா
ந்தர்வவேதமென்ற மூன்று" (உபவேதங்கள்) என்று குறிக்
கப்பட்டமுறையில் ஆயுர்வேதமென்பது ரிக்வேதத்துக்கும்
உபவேதமாகலாம். ரிக்வேதத்தில் மதுவித்யையை ஒருவருக்
கு உபதேசித்தால் சிரமறுந்துபோகுகவென ஒருசாபம் தம
க்குநேர்ந்ததுபற்றி இவ்வபூர்வவஸ்த்தை உலகத்தில் பிரசார
மாகாது விருக்குமெனக்கருதி அசுவினிதேவர்களுக்கு அவ்
வித்தையையுபதேசித்து அவனிடம் குருதெட்சிணையாக ஆ
ன்றோர்சாபத்தாலறுந்ததலையை ஒட்டப்பெற்றார் ததீசிமாமு
னிவரென, நிரூபித்து ஒருவித்தையில் மற்றொருவித்தைமா
ற்றிக்கொண்டசமாசாரம் குறிக்கப்பட்டமையினும் ஒஷதி
சூக்தம் முதலியன அவ்வேதத்திலேதானே படிக்கப் படுத
லானும்; ஆயுர்வேதம் ரிக்வேதத்துக்கும் உபவேதமெனு
லாம். அற்றேல் கர்ப்போபநிடதமே பட்டநாராயணர் கொ
ண்டவாறு அதர்வண வேதத்தைச் சேர்ந்தவுபநிடதமாகக்
கூடாதோவெனின் அற்றன்று. முக்திகோபநிடதத்தில் இஃ
து யஜுர்வேதத்தைச் சேர்ந்ததெனவே குறிக்கப்படுதலா
னும், இதனை யதர்வணவேதமென்ற நாராயணபட்டரும், மு
ண்டகோபநிடத வியாக்கியானத்தில் நாமெடுத்துக் குறித்த
இல. அதர்வசாகைகளின் உபநிடதங்களையன்றிமற்றவற்றை

யும் தம்மதிபோனவழி முன்பின்முறணுப் அதர்வண வேத்
த்திற்சார்ந்தனவென எடுத்துகிருப்பபதாலும், இதனை அத
ர்வணமெனத் துணிதல் கூடாமையால். இனிரிக்வேதத்து
க்கும் அதர்வணவேதத்துக்கும் ஆயுர்வேத முபவேதமாவது
போல, இவ்வுபநிஷதம் யஜுர்வேதத்தைச் சார்ந்ததாயின்
அதுவும் யசுர்வேதத்தின் உபவேதமாக (ஸாமவேதத்துக்கு
மந்திரங்களெல்லாம் ரிக்கேயாதலால்) எல்லாவேதங்களுக்
குமுபவேதமாக ஆயுர்வேதமமையவேண்டியிருக்க அதனை
தனித்து அதர்வணவேதத்துக்குறியதென்றதூஉம், யசுர்
வேதத்துக்கு முபவேதமெனக்குறிக்காததூஉம், மற்றய
வேதங்களுள் ஒன்றிலுபனயனம்பெற்றவன்மற்றவேதங்களை
அத்தியயனம் செய்யலாமாயினும் அதர்வணவேதோக்த உ
பனயனம் பெறுதலுநவன் அவ்வேதத்தைஅத்தியயனம்செ
ய்பவனாகானென்ற விதியிருத்தலால், அதர்வணவேதத்துக்கு
வேறுபனயனவிதியேற்பட்டதை யனுசரித்து சுஸ்ருதத்தில
தன்வந்திரி உபனயனத்திலுபதேசித்ததூஉம், அவகமாகா
தோவெனின், அன்று. எல்லாவேதங்களையும் மூலமாய்
க்கொண்டே உபவேதங்கள் நிலைபெறுதலாலும், அதர்வ
ணவேதத்தில் விசேடமாய் அனேகமகாரோகங்களுக்கு நி
விர்த்திமார்க்கங்களும் (அஷ்டாங்க) பதினெட்டு மஹாசாக்
திகளும், காணப்படுதலாலும் அதனைச்சிறப்பாய் ஆயுர்வே
தமென்றது தவறல்ல. மேலும், உபவேதங்களுக்கும்ஸ்மிரு
திகளுக்கும் புராணங்களுக்கும் ஒவ்வொருவேதமே மூலமா
யிருக்கவேண்டு மென்பது அவசியமில்லை. அதுகொண்
டே சஸதிரகாண்டம் முதலிய மூலங்கள் பலவதர்வணவேத
த்திற் காணப்படினும், தனுர்வேதத்துக்கு யசுர்வேதம் மூல
மென்றானன்றோர். அனேகஸ்வரங்கள் இதரவேதங்களிலி
ருப்பினும் பிராம்மண வசிஷ்ட நியாயத்தால் தலைமைபற்றி
யெல்லாச்சுரங்களும் நிறைந்தசாமவேத காந்தர்வ வேதத்
துக்கு மூலமென்றார் நாரதாதியோர் அம்செதங்கனமாயி

னுமாகுக. இக்கர்ப்போபநிஷதம் கர்ப்பாசயத்தை ஐந்தென்றும், எட்டுக்கோடிரோமங்களென்றும், அனேக நாடிகளையும், நிரூபிக்கின்றதாதலின் பரமப்பிரசித்தமான சரீரஸ்திதி இதன்கண் ணெடுத்துக் காட்டப்படுகின்றது. அன்றியும், இதனில் சரீரகாரணபதார்த்தங்களும், புருஷசரீரத்திலேயே ஸ்திரீபுருஷ பீஜபரிபாகமும் பெண்களின் சரீரத்தில் ஐம்பது ஸீம்வரையில் கெர்ப்பம் அடையும் அமைப்புகளும், பெண்பிள்ளைகள் அதிகமாவதற்குக் காரணமும், இரட்டை, செவிடு குருடு முதலியவை பிறப்பதற்கு காரணமும் கெர்ப்பபுருஷசங்கற்பமும், வைசுவானரவித்தையின் அர்த்தவாதமும் பிராணாக்னிஹோத்திர வித்தையும், மற்றுமுள்ள அனேகரகசியங்களும் சொல்லப்படுகின்றது. அனேகபுராணங்களில் இதன்பிரஸ்தாவமுண்டு. தர்மசாஸ்திரநிபந்தனக்ரந்தங்களில் பிரம்மஸ்ரீ வைத்தியநாததீக்ஷிதர் முதலிய பலர் இதன்வசனங்களை யெடுத்துதாஹரித்திருக்கின்றார்கள். அவித்யாநிவிர்த்திரூபமான மோக்ஷத்திற்கு தேஹாத்தியாசமே மூலப்பிரதிபந்தமாதலால் அதனை நிவர்த்திக்கவேண்டிய உபாயங்களைக் குறிப்பதால் இவ்வேதபாகம் உபநிஷதமெனப்பட்டது. இதற்கு சிலமூதாசிரியர்களுரையுண்டு. மற்றஉபநிஷதங்களுக்கும் எமக்குக்கிடைத்தசாமக்கிரியைகளைப்போல் இதற்கும் கிடைத்தமையால் சதோபநிஷத வியாக்கியானமுறையில் இவ்வுபநிஷதத்திற்கும் வடமொழியில் யாம்செய்த வியாக்கியானத்துக்கிணங்க தென்மொழியிலும் அதற்கோருரையிட்டோம். இதனை பரமேசுவரர்களாய் உள்ளபெரியோரனைவரும் பிழைகளைந்து குணங்கொண்டு வாழ்த்துவாரென விசுவசித்து விசுவநாதன் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

சுபம்.

கிரந்தகர்த்தர்.

गर्भोपनिषत्प्रारम्भः ।

——(*)——

सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै । तेजस्वि नावधीतमस्तु मा विद्विषावहै ॥ ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

पञ्चात्मकं पञ्चसु वर्तमानं षडाश्रयं षड्गुणयोगयुक्तम् । तं सप्तधातुं त्रिमलं द्वियोनिं चतुर्विधाहारमयं शरीरम् । भवति पञ्चात्मकमिति कस्मात् । पृथिव्यापस्तेजोवायुराकाशमित्यस्मिन् पञ्चात्मके शरीरे । का पृथिवी का आपः, किं तेजः को वायुः किमाकाशं इत्यस्मिन् पञ्चात्मके शरीरे । यत्कठिनं सा पृथिवी यद्द्रवं तदापः यदुष्णं तत्तेजः यत्सञ्चरति स वायुः यत्सुषिरं तदाकाशमित्युच्यते । तत्र पृथिवी धारणे आपः पिण्डीकरणे तेजो रूपदर्शने वायुर्व्यूहने आकाशमवकाशप्रदाने । श्रोत्रं शब्दोपलब्धौ त्वक्स्पर्शे चक्षुषी रूपे जिह्वा रसने घ्राणं गन्धे । वाग्वचने पाणिरादाने पादौ गमने पायुर्विसर्गे उपस्थ आनन्दने ॥ बुद्ध्या बुध्यति निश्चिनोति मनसा सङ्कल्पयते विकल्पयते चित्तेन संजानाति अहंकारेणाहंकरोति । कानि तानि तत्त्वविषयेषु वर्तन्ते । कं षडाश्रयमिति । षड्रसाः मधुराम्ललवणकटुकषायतिक्ता स्तानाश्रयते तेनाश्रितम् । षड्भावविकाराः जायते अस्ति वर्धते विपरिणमते अपक्षीय

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 𑌕𑌰𑍋𑌤𑌿 | 𑌤𑌸𑍍𑌯 [illegible]
[illegible]
𑌸𑌾𑌵𑌯𑌵𑌃 | [illegible] 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 [illegible]
[illegible] 𑌯𑌜𑍇𑌤 [illegible] |
[illegible] 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌂 [illegible]
𑌯𑌜𑍍𑌞𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 [illegible]
[illegible]
[illegible] 𑌯𑌜𑍇𑌤 | 𑌤𑌤𑍍𑌰 [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] |
[illegible]
[illegible] |
[illegible]
[illegible]
[illegible] |
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] |
[illegible]

ஸம்வத்ஸரஶரீரம் ப்ராப்நோதி । ஏதந்நவேவேதோத்ஶா
ணிகம் சாக்ஷுஷம் நாஸ்த்யாம் । தத்ர தேஹே சாக்ஷோபா
ய: ஸம்ப்ராஜ்ஞஸ்யாத்ராத்தாம் தே நாஸ்மத்யஸந்நி ஶரஸதி । ஏச
ஷ ஏதஞ் நக்ஷத்ரம் ஶாரீரகம் ஏதந விநா ந ஜீவதி ।
ஸாயம் நாமேவாபிரேவாத்ரம் ஸப்தஸ்ருஷ்ண யாமஶாக்ஷா
சாக்ஷ்யேஷு தத்தஸ்ய சம்ஸ ஸவதேஶந்நிஷ்டு । ஸஸ: ஸம்ஸ்க்ருத
வித்ரீ கலேக்ஷ ஸம்ஸிந்த்ராஜாநாயம் மக்வா ஶிஶுஶிர:
ஸபாஶம் ப்ரவிஶ்ய ஸஷ்ட்ராதாராமஹத்ஶாபக ப்ராண:
தபந்யதி । ஸாஸஷ்ட்ராப்ரஜ்ஞா நாஶஹவதி । தத்ர
ஜ்யேத ப்ராணாதி மஹாஸம்ஜஸம் ஜகேராக்தி ஶேவேயாய:
ப்ரஸ்கம்தேத । ஜாதஸ்ய தா ஹ்யதயே ப்ரதிஷ்டித: । தம்
தயோமேநாயஶ்ரேஹ்யாக ஸஷ்ட்ராகம் ப்ரவா
பேத்யாமஹஸ்யா பரோக்ஷதஶீஹவதி । தாத்ய
ஹிமேபதேஹம் தஸ்யேஸ்யா ஸ்ரஸ்தாஸக்ஷீ ஸ்ரஷ்ஸ
ஹ்யாப்யேதாஜீவத்யேஸாந்ய வித்யாவேதேத ப்ரா
ணீ । கஸ்யாஸகஜ்ஞா ந ஸீஜ தஷ்டம் கலஸம் த: கர
ணம் தத்க்ஷஶரீரம் தஸ்மிந் ஏவா ஸ்ராஸே ஷட்ணே கா
பஸஶீதி ஸம்யிஶதம் நவஸ்நாயஶதாநிஹ்யதயமா
த்ம்ஷேண சாதஶமாஜீஹாவித்தம் ப்ரஸ்ம்ஸமஶ்வாசம்
ஶாஸ்ம்ஸஷம்ரேத: ப்ரஸேண்டேசா ஸஸம் நஶ்வரம்
விஜ்ஞாயயா மஹாமஸஷ்ட்ரா ப்ரதிஷ்டேதாஹஸயாஜ்ஞ
தவிமேயகீர்த்யேதே நபாநஶரீரம் ப்ரியேப்ராத்ய
தயாகஜ்ஞஸ்ய ஸம்ஸாரிண ஆஹாரஹா: க்ரி. ஹிஸ்தந்த
க்ர பாஶீஷயோஃவாந் யயா நரகேதஸ்மிந்நேஹவ ஶ
ரீர । தஸ்ய தத்ஶரீரம் பரிஜ்ஞாய தவிஸ்ராத்திமேவ
பாராயம் வேதக்ஷஶாஸ்த்ரம் பரிஸமாப்ய வேதபாராயம்வேத
க்ஷஶாஸ்த்ரம் பரிஸமாப்திக்ருப நிஷ்டா ॥

ஓம் ஸஹ நாவவத்விதி ஶாந்தி: ।

ஸமாப்தஶ்ச பாராயணபாடஸம்ப்ரதாய: ॥

—()—

கர்ப்போபநிஷத்

விவரணம்

அவதரணிகை

அகிலலோக மாதாவாகிய வேதநாயகி கருணைமேலீட்டினால் சாதுக்களுக்கு துறவுண்டாக்கி அதன் வழிப்ராமார்த்தோபதேசம் செய்யக்கருதி மங்கை பங்காளன் மாசிலாமணி பிரப்பிலிப்பிஞ்சகன் பரமேச்சுரனது பாத மலர்களில் இடையறுவந்து ஏகரசமாய்த் தோன்றுவதற்குச்சரீரமூலமான பிரபஞ்ச வாசனையே பெருத்த தோரிடையூறாதலால் அது விலகாதுழி ஈசனடியன்பு கிடைக்காமையால் அவ்வன்பின்றிவீடு கூடாதுபற்றி அவ்வன்புதோன்ற பிரபஞ்ச வாசனை யொழிய சரீரப்பற்றைத்துலைப்பதே நல்வழியாமெனக்கருதி கர்ப்ப பீடையின் நிரூபணமுறையால் சரீரத்தைக் குச்சிதப்படுத்துவாளாய்த் தோன்றுகின்றாள்.

பஞ்சாத்மகம் பஞ்சஸு வர்த்தமானம்
ஷடாஶ்ரயம் ஷட்குணயோகயுக்தம் |
தம் ஸப்ததாதும் த்ரிமலம் த்வியோநிம்
சதுர்விதாஹாரமயம் ஶரீரம் என்று

(இ—ள்) ஐந்து ஆத்துமாக்களையுடையதும், ஐந்துகளிலிருப்பதும், ஆறுகளையாசிரயமாய்ப் பெற்றதும், ஆறுகளான குணங்களுடைய சம்பந்த முடையதும், ஏழுதாதுக்களுடன் கூடியதும் மூன்றுகளான மலங்களையுடையதும் மூன்றுகளான காரணங்களையுடையதும் நான்குவகைகளான ஆகாரங்களின் பரிணாமமும் சரீரமாம். (எ—து)

(வி—ரை) ஐந்து ஆத்துமாக்கள் என்பன ஐந்து பூதங்களாம். அப்பூதங்களே சரீரகாரணங்களென்பதாயிற்று. ஐந்துகளின் என்ற விடத்துபன்மை மும்மையைக்குறிப்பதாகவே, அதன் பெரு

ருள்பதினைந்தாம். இருப்பது = நடப்பது, பதினைந்துவழிகளிற் செல்வதென்பது பொருள். ஆறுகளையென்றபன்மை இருமையி னின்றது. ஆகவேபனிரெண்டு அதன் பொருள். இங்ஙனமேகு ணத்திற்கு விசேஷமான ஆறுகள் என்பதும் பனிரெண்டைக்கு றிப்பதாம். வைத்தியம் முதலிய சாஸ்திரங்களில் ஆறுதாதுக்க ளிலமைந்தது சரீரமெனக்குறிக்கப்பட்டமையால் உண்மையில்ர சம் என்ற மஹாதாதுவின் சொரூபம் இதில்விளங்குவதுபோல மற்றெங்குமிலையெனக்குறித்தற்காகவே ஏழுதாதுக்களுடன் கூடி யதெனக்குறிக்கப்பட்டது. மூன்றுகளான என்றவிடத்து பன் மையும் இருமையைக்குறித்ததாதலால் மலம் மூத்திரம் வியர்வை யென்றமும்மலங்களும்வாதம், பித்தம், கபம், என்றமுத்தோஷங்க ளும் அதன்பொருளாகும். மூன்றுகளானஎன்றவிடத்து பன்மை மும்மையைக்குறித்ததாதலால்ஆணவம்,கார்மணம், மாயேயம், என் றமும்மலங்களும், சத்துவம், ரஜசு, தமசு, என்ற முக்குணங்களு ம், சித்து, அசித்து ஈசுவரனென்ற முத்தத்துவங்களும் அத ன்பொருளாம். நான்குவகைகளான என்ற விடத்து பன்மை இ ருமையைக்குறிக்கும். ஆகஇருநான்கு விதங்களதன் பொருளா ம். வாத்யம் (பல்லாற்கடித்துச்சுவைக்கத்தக்கது) வெயம்(த ண்ணீர்போல் அருந்திசுவைக்கத்தக்கது) லேஹ்யம் (பாயசம்மு தலியவற்றைப்போல இதழ்குவித்துறிஞ்சு சுவைக்கத்தகது.) லெ ஹ்யம்) தேன்முதலியவற்றைப்போலநாவாலேற்கத்தக்கது.) இஃ தோர் நான்குவகை. ஔஷதம் (நிலத்தில் முளைப்பது கனிவர்க்க ங்கள் முதலியன.) ஜலஜம் (நீரிலுண்டாவது தாமரைக்கிழங்கு முதலியன) ஜங்கமம் (பிராணிகள் ஆடுமுதலியன) லௌகி கம் (உலோகங்களிலுண்டாவன உப்பு.) துத்தம்முதலியன. இ வையோர் நான்குவகை. இங்ஙனம் இவைகளை யொருங்கு சே ர்த்திடில் சரீரத்திற்கு ஆதாரமான பொருள் எழுபத்தெட்டாகி ன்றன. அவைகளின் சொரூபங்கள் பின்னர் முறையே நிரூபிக் கப்படும், ஆகவே சரீரசொரூபம் அறிய விரும்புவோர்க்கு இ வ்வளவுபதார்த்தங்களின் அறிவு வேண்டுமென்பது அமைந்தது இதனையுபலட்சணமாய்க்கொண்டு மேலே வரும் விவரணத்தால். ஏழுபொருள்கள் அதிகப்படுதலால் அதனையும் சேர்க்க. எண்பு த்தைந்து பொருள்கள் அறியற்பாலனவாமென்பது முடியும்.

அவதரணிகை.

மேலேவினுவிடையாய் மேற்குறிக்கப்பட்ட பொருள்களை விரித்துக்காட்டுகின்றார்.

ஶவ திவெஂ ஶர் தூகஜி திகஸூாக
வ்ருயிவ ஹ்ாவெஷூஜொவாய஼ாகாஶதிதி ||

(இ—ள்) ஐந்தாத்துமாக்களையுடையது எதனுல்? என்றால் பிருதிவி, அப்பு, தேயு, வாயு. ஆகாயம், என்பன (ஐந்தாதலால்)

(வி—ரை.) இவ்வைந்து பூதங்களையாத்துமாவெனக்குறித்தமையால்சரீரத்தின்முதற்காரணங்களிவையேயாமென்பதாயிற்று.

அவதரணிகை

இவ்வைந்துபூதங்களின் காரியமே சரீரமாயின் அதனம்சங்கள் சரீரத்தில் டாவையெனவிரித்துரைக்கின்றார்.

கஷிநஂஶாதூகெஶரீரெ|
யஃகஒிநஂஸாவ்ருயிவீ||
யஉ்ஷவஂதஊாவஃ|
யஊஷஂதெதூஜஃ||
யஸஂசாரதிஸவாய஼ஃ|
யஃஸஷிரஂதஊாகாஶதிதஹ்஼ஷ்ுஎத|| என்று

(இ—ள்) ஐந்தாத்துமாக்களையுடையவிச்சரீரத்திலே எதுகடினமோ அது பிருதிவியின்கூறு. எது திரவமுள்ளதோ அதுநீரின்கூறு. எதுசூடுள்ளதோ அதுதேயுவின்கூறு.எது சஞ்சரிப்பதோ அதுவாயு.எதுவெளி அது ஆகாயமென்றுசொல்லப்படும்.

(வி—ரை.) கடினம்=என்பு மாம்சம்முதலியன. திரவம்=நெகிழ்ச்சிக்குணமுடையது. சூடுள்ளது=பித்தம்முதலியன. சரி

ப்பது=பிராணன்முதலியன, வெளி=இதயாகாசம் முதலியன. என்றுசொல்லப்படுமென்றதால் இவ்விதப்பாகுபாடும் பரமார்த்தத்தில் நிலைபெறாதென்பது குறிக்கப்பட்டது. மேற்கண்ட ஒவ்வொரு பொருள்களிலும் எல்லாப்பூதங்களினம்சங்கள் இருப்பினும் மல்லக்கிராமம் என்பதுபோல அவ்வப்பூதமயமென பெரும்பான்மை நோக்கி வியகரிக்கப்படுமென்பது கருத்து.

அவதாரணிகை

இனி அப்பூதங்களின் அம்சங்களால் சரீரத்தில் நிகழும் உபகாரங்களைக்குறிக்கின்றார்.

தத்ர ப்ருதிவீ நாமரூபேண
ஆப꞉ பிண்டீகரணே
தேஜோ ரூபதர்சநே
வாயுர்கமநே
ஆகாசோ(அ)வகாசப்ரதாநே॥ என்று

(இ—ள்.) அவைகளில் பிருதுவி நாமத்தைதரிப்பதிலும், நீர்பிண்டமாக்குவதிலும், தேயுரூப தர்சனத்திலும் வாயு கமனத்திலும், ஆகாசம் அவகாசங்கொடுப்பதிலும். எ-று

(வி—ரை.) அவ்வைந்து பூதங்களுள் நாமமென்றபெயருக்குதாரணமாய் ஆச்ரயமாயுள்ளரூபத்திலே அதாவது அமைப்பிலே நிலம் உபயோகப்படுவதாம். அதாவது சரீரத்தின் தூலவமைப்பு நிலத்தின் கூறாயமைந்ததாம். பிண்டமாக்குவது = இருபொருள்களைச் சேர்ப்பது; சரீரத்தின் சந்திகளில் கபரூபமாய்நின்று நீரே அவற்றைச் சேர்த்தலைச் செய்கிறது. ரூபதரிசன = உருவத்தைக்காண்பது. செம்மை கருமைமுதலிய நிறங்களையும் குட்டை நெட்டை அகலம் நீளம் முதலிய அளவைகளையும் மற்றுமுள்ளபொருள்களையும் அறிவது. இது சரீரத்திலமையும்பாகம்முதலியவற்றுக்கும் உபலக்ஷணமாம். கமனம் = ஓரிடம்விட்டுமற்றோரிடத்துக்குபோகுதல் அவகாசம் = சரீரத்தின் உட்புறத்துவாயுவை நிறுத்தத்தக்கவிடம் — ஆகவே ஜீவநம் வித்ருதாரவேஷம்வஹதா

[illegible] | [illegible] | — தரித்தல் ஒட்டுதல் அறிதல் நடை உறுதி இவ்வைந்து குணங்களும் ஐந்து பூதங்களாய்த்தோன்றி சரீரத்தைக்காப்பனவாமென்பது இதன்கருத்து

அவதரணிகை.

இனி ஐந்து களிலிருப்பதென்பதை யெடுத்துக்காட்டுகின்றார்

ஶ்ரோத்ரம் ஶப்³தே³ த்வக் ஸ்பர்ஶே
சக்ஷூ ரூபே ஜிஹ்வா ரஸே
க்⁴ராணம் க³ந்தே⁴ வாக்³ வசனே
பாணிராதா³னே பாதௌ³ க³மனே
பாயுர்விஸர்கே³ உபஸ்த² ஆனந்தே³ இதி என்று

(இ—ள்) செவி சத்தத்திலும் துவக்கு ஸ்பர்சத்திலும் கண் ரூபத்திலும் நாக்கு ரசத்திலும் மூக்கு கந்தத்திலும் வாக்கு வசனத்திலும் கை யேற்பதிலும் பாதம் நடப்பதிலும் வாயு விடுவதிலும் உபஸ்தம் ஆனந்திப்பதிலுமிருக்கின்றது.

(வி—ரை) பூதங்களைந்தும் என்பு மாம்சம் முதலிய ரூபமாய் சரீரத்துக்குபகாரமானதுபோல் பூதசூட்சுமங்களிலுண்டான இந்திரியங்களும் சரீரத்துக்கு சப்தஸ்பர்சரூபரசகந்தங்களை கிரகிப்பதும் சொல்லுதல் ஏற்றல் நடை விடுதல் களித்தலான ஐந்து தொழில்களைச்சரீரத்தில் நிகழ்ச்செய்வதும ஞானேந்திரிய கர்மேந்திரியங்களுக்கு உபகாரமாம் என்பது தாத்பரியம். செவிமுதலியன தோல்முதலிய பொருள்களாமென்ற மயக்கத்தை யொழிக்கவேண்டி அவற்றிற்கு விஷயங்களைக்குறித்தாரென்க.

அவதரணிகை

வெளிவிஷயங்களெல்லாம் மேற்கண்ட இந்திரியங்களாலறியப்படுமாயினும் அப்பொருள்களையறிவது எதுவெனவினுசிகழ அதனைக்குறித்துரைக்கின்றார்

புத்³த்⁴யா பு³த்⁴யதி நிஶ்சிநோதி
மநஸா ஸங்கல்பயதே விகல்பயதே ச |
சித்தேந ஸஞ்ஜாநாதி அஹங்காரேணாஹம் கரோதி
தாநி தாநி ச விஷயேஷ்வவஸஜதி

(இ—ள்) புத்தியாலறிவான், நிச்சயிப்பான். மனதாற் சங்கற்பிப்பான், விகற்பிப்பான். சித்தத்தால் நன்றாயறிவான் அகங்காரத்தாலஹங்கரிப்பான். அவையவை அவ்வவற்றின் விஷயங்களை நிரூபிக்கின்றன. எ—று.

(வி—ரை) புத்தி, மனம், சித்தம், அகங்காரம் இந்த நான்கின்தொகுதியான அந்தக்கரணமானது ஜீவோபாதியான அவித்தியாசொரூபம். அறிவான் = இஃது குடம் இஃது மனிதனென்பதாதி தெரிந்துகொள்வான். நிச்சயிப்பான் = குடமே மனிதனே யெனத்தெளிவான். சங்கற்பிப்பான் = இதனையிங்ஙனம் செய்வோமெனநினைப்பான் விகற்பிப்பான் = இதனைச்செய்யக்கூடாதெனத்துணிவான். நன்றாயறிவான் = இஃது என்னுடைய தெனமமதையைப்பெறுவான். அகங்கரிப்பான் = யானென அகந்தைகொள்வான். மேற்கண்ட தொழில்களில் கருவிகளைப்போல் எழுவாயும்தொடர்ந்து குறிக்கப்படுதலால் அவனையும் சேர்த்துசரீராதாரமைந்தெனக்கொண்டு எண்ணைப்பூர்த்திசெய்துகொள்ளவேண்டும். அவ்வவற்றின் விஷயங்களென்பன முற்கூறிய அறிதல் தெளிதல்முதலியன- இதனால் ஒவ்வோரிந்திரியங்களுக்கு ஒவ்வொருவிஷயங்கள் வியவஸ்தையாயிருப்பதுபோல இவற்றிற்கும் விஷயங்கள் வியவஸ்தையாயிருக்கும் என்பதாயிற்று.

அவதரணிகை

இனி பனிரெண்டாசிரயங்களைக்குறிக்கின்றார்-

காத்ஷ்வாஶ்ரயதீதி
ஷட்³வ்ரஸா: உபாத்⁴யோவணகடாக்ஷாயதித்தா:|
தாநாஶ்ரயதேகேவலாஶ்ரிதம்|| என்றும்

ஷட்³பா⁴வவிகாரா:
அஸ்தி ஜாயதே வர்த⁴தே
விபரிணமதே அபக்ஷீயதே
விநஶ்யதீதி ஷட்³விக்ரியதே வ ॥ என்றும்

(இ—ள்) எதனால் ஷடாச்ரயமெனின், ரசங்களாறு இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, உரப்பு, துவர்ட்பு, கைப்பு, என்பன. அவைகளை பாச்சிரயித்தமையாலும் அவைகளாலாசிரயிக்கப்பட்டமையாலும். என்பதும்

ஆறுபாவவிகாரங்கள். இருக்கின்றான், பிறக்கின்றான், வளர்கின்றான், பரிணமிக்கின்றான், இளைக்கின்றான், அழிகின்றான், என்று விகாரமடைவதும். என்பதுமாம்.

(வி—ரை) அறுவகைச்சுவைகளுக்கும் ஸ்தானமும், அறுவகைச்சுவைகளால் வளருவதும், சரீரமேயென்பததன் கருத்து. பாவவிகாரங்கள = பிராணிகளில் தோன்றும் திரிபுகள்- இருத்தல் முதல் அழிதல் வரைவிகாரங்களேயாதலால் அவைகளைபொதுவாய் விகாரமென்றும் குறித்தது

அவதாரணிகை

இனி அறுவகைகளான குணங்களின் சம்பந்தங்களைக்காட்டுகின்றார்.

ஷட்³சக்ராணி மூலாதா⁴ரஸ்வாதி⁴ஷ்டா²நம்
மணிபூரகாநாஹதவிஶுத்³தா⁴ஜ்ஞா
ஷட்³கு³ணா:
ஷட்³வர்கா³: காமக்ரோத⁴லோப⁴மோஹமத³மாத்ஸர்ய
தத்ரைவ ஸந்நிஷ்டா² பா⁴வயத்வா: ॥ என்று

(இ—ள்) மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், ஆக்னேயி, அனுஹதம், விசுத்தம் என்பன அங்க நாடியைப் பற்றி நிற்பதாம். ஆறுகுணங்களோ காமாதிகளும் சமாதிக

ஞமாம். அவற்றின்யோகம் அவற்றின்கட்டை, இவையுடன் கூடியது. எ—று

(வி—ரை) ஆக்ஞாஸ்தானத்தையே யிங்கு ஆக்னேயியென்றார். அதனையநுஸந்தத்தினமேற்கூட்டுக. அந்தநாடியை = பிரம்மநாடியெனப்படும் சுழிமுனைநாடியை. காமாதிகள் = காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியம் இவை. சமாதிகள் = சமம், (வெளிப்புலனடக்குதல்) தமம் (உட்புலனடக்குதல்) திதிக்ஷை (குளிர்ச்சிவெப்பம் முதலியவற்றையேற்றல்,) க்ஷமை (வசைமுதலியவற்றைப் பொருத்தல்) விநீதி (வணக்கம்) கருணை = (மற்றவர்துயரமேற்காமை) இவ்வாறும் காமாதிகளுக்கு எதிர்மறைக்குணங்களான சமாதிகளாம். அவற்றின்சம்பந்தமென்பதாதி அதன்விவரணம்.

அவதாரிகை.

இனி எழுதாதுக்களைக்குறிக்கின்றார்.

ஷட்ஜர்ஷபகாந்தார
பஞ்சமமத்யமதைவதநிஷாதாஃ ஶ்ருதி
இஷ்டாநிஷ்டஶப்தஸம்ஜ்ஞாஃ
ப்ரதிவ்யாஹவம் ஸிவஸ்து || என்று

(இ—ள்.) இனிஷட்ஜம், ரிஷபம், காந்தாரம்; பஞ்சமம், மத்தியமம், தைவதம், நிஷாதம் என்றுஇஷ்டமும்அனிஷ்டமுமான சப்தங்களின் பெயர்கள். ஆக அவை ஏழுவகையாம். எ—று

(வி—ரை.) ஷட்ஜம் முதலான ஸ்வரங்கள் காந்தர்வவேதத்தில் பிரசித்தங்கள். இஷ்டம் = விரும்பத்தக்கது. அனிஷ்டம் = வெறுக்கத்தக்கது. காதலிகள் கொஞ்சும்சொற்களிலும், கடுங்கானகங்களில் கால்நடைகள், கடுமொலிகளிலும் மேற்கண்ட ஏழுஸ்வரங்களே அமைக்கப்படினுமவை மனிதர்க்கின்ப துன்பங்களை விளைவிப்பது அநுபவசித்தமாதலாலென்க. இஃது ஒருவகையேழு தாதுக்கள்.

அவதாரணிகை

மற்றொருவகை ஏழுதாதுக்களைக் குறிக்கின்றார்.

ஶுக்லோ ரக்த: க்ருஷ்ணோ தூம்ர:
பீத: கபில: பாண்டுர இதி
ஸப்ததாதவஸ்ஸப்தவர்ணா: || (என்பது)

(இ—ள்.) வெள்ளை, சிவப்பு, கறுப்பு, சாம்பல்நிறம், மஞ்சள், ஊதாச்சிவப்பு, சிவப்புக்கலந்தவெள்ளை ஆகஏழுவர்ணங்கள் உடையன ஏழுதாதுக்களாம்.

(வி—ரை) வெள்ளை = ரசதாதுவாம். அதற்கு இஃது உருவமெனக் குறிக்கஇயலாமையால் அதனையொருவாறு வெள்ளையென்றது. சிவப்பு = சரீரத்துள்ளஉதிரம். கறுப்பு = சரீரத்துப்புலால். சாம்பல்நிறம் = மேதஸ். (அதாவது ஊண்தசை) மஞ்சள் = வெண்மைமலிந்த மஞ்சள்என்பு. ஊதாச்சிவப்பு = சீழ். சிவப்புக்கலந்தவெள்ளை = சுக்லம் என்று சேர்க்கவேண்டும். இவ்வர்ணங்கள்குரியகிரணத்தில் உள்ளன. இவைகளே ஆச்சூரியனுக்கு ஏழுகுதிரைகளென வழங்கப்படும். இதனால ரஸாஸ்ருங்மாம்ஸமேதோஸ்த்திமஜ்ஜாஶுக்ராணி தாதவ: = ரசம், உதிரம், புலால், ஊன்தசை, என்பு, சீழ், சுக்கிலம் என்றுள ஏழுதாதுக்கள் என்றவைத்தியசாஸ்திரப்படி அவையே சரீரத்திற்கு மூலமெனக்காட்டப்பட்டன. இவ்விடம் ஏழுவர்ணங்களைவேறாகவும், அவ்வவ்வர்ணங்களுக்கிடமான ரசாதிதாதுக்களை வேறாகவுமெடுத்தால் பதினான்காகும், அறியத்தகுந்த பொருள்களும் எண்பத்தைந்தாய்முடியும், அவ்வர்ணமுள்ளதாதுக்களே இதன்பொருளாயின், எழுபத்தெட்டேயுள்ளனவாமிங்கு பொருள்களென, வேறுபடும். இவ்வளவால் தூலசரீரகோசத்தையும், சூக்குமசரீரகோசத்தையும், லிங்கசரீரகோசத்தையும், சுத்தஜீவசொரூபத்தையும் பகுத்தறியவிரும்பின், அல்லது பஞ்சகோசங்களையும்இலக்கணங்களுடன் தெளியவிரும்பின் அறியவேண்டிய பதார்த்தங்கள் மேற்கண்டபடி எண்பத்தெட்டல்லது எண்பத்தைந்தாமெனத் துணியப்பட்டது.

அவதாரணிகை

மேற்கண்ட பொருள்களாலமையும் சரீரத்திறுதிகாரணமானரசசொரூபத்தை நிரூபிக்கின்றார்.

ஸ்வாதுஹ்ருதா ஸ்வாத்வி தத்விஷயா ஜாயதே உபவீயதே
வாஸ்யாப்ரஸமாணஸ்வாதஃ
யாபொநிஸ்ஸாரஸ:॥ (என்று)

(இ—ள்) ஒருவனுக்கேதோ ஒரு ஏதுவால் என்றேனும் ஓர் பொருளைப்பற்றி உண்டாய்விர்த்தியடையும். ஒன்றுக்கொன்றுரசகுணமாதலாலதுகாரணம். அதுவேரசமாம். என்று

(வி—ரை) ஒருவனுக்கென்றது பொதுச் சொல்லாதலால் முக்தனல்லாத மற்றைய ஜீவன்கள் மேனின்றது. ஏதோ ஒரு ஏதுவால்=பல ஏதுக்கள் ஒருவனுக்கு ஒருபொருளைக்கருதஉளவாதலின் அவையெல்லாம் இங்குகுறிக்கப்பட்டன. என்றேனுமென்றது எல்லாக்காலத்திற்கும் குறிப்பு. ஒருபொருளைப்பற்றி=விருமபத்தக்கருணமுடையதோர் பொருளைப்பற்றி. உண்டாய் விருத்தியடையும்=உண்டாம் நிலைமையில் நிற்காதுமென்மேலும்வளரும்; ஒன்றுக்கொன்றுரஸகுணமாதலால்=பொருள்களுள் ஆண்மாவும் சேர்ந்தமையால் கருதுவோனும் கருதப்படுபவதும் சேர்ந்து ஒருபொருள் உண்டாகவேண்டுமாகையால் இருபொருளின் இயல்புகளும்சரீரவேதுவான ரசமெனப்படுமாம் என்றதாயிற்று. இங்குவிசாரிக்கப்பாலதிது— உலகப்பொருள்கள் காணப்படுவனவும் காண்பானுமாக இருவகைப்பட்டன. காண்பானிடத்து ரசங்கள் (சுவைகள்) ஒன்பது, காணப்படுவனவற்றுள் உள்ளன ஆறு. முற்கூறிய ஒன்பான்சுவைகள் இன்பம்முதலியன. அவை இன்பம், வீரம், கருணம், அற்புதம், ஹாஸியம், பயானகம், ரௌத்ரம், பீபத்ஸம், சாந்தமென்பனவாம். காணப்படுவனவற்றுள்:— இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கைப்பு, உரப்பு, உவர்ப்புஎன அறுவகையாம். இப்பதினைந்துவகைச்சுவைகளையும் காணப்படும்பொருள்களிடத்தே அமைந்தனவென்பார் சிலர். மற்றுஞ்சிலர் சொற்சுவைகளொன்பதென்றும். பொருள்சுவைகளாறென்றும்கூறுவர். புருடனிடத்துச்சுவைத்தலுக்கேதுவான விருப்பமென்ற வேர்

பண்புளதாதலால்அதனைச்சேர்த்துபதினறுவகைரசங்களுண்டாம். இதனிடத்துள்ளமுறையிது:— ஆன்மாவிடத்துள்ள விருப்பமென்ற மூலரசமே ஒருபொருளினறிவடித்தோன்றித்தம்மிடத்துள்ள இன்பம் முதலிய ஒன்பான்சுவைகளுக்கு விஷயங்களாகிய சில பொருள்களைக் கவர அதன்மயமாய் அதனைச் சுவக்க முயற்சியையுண்டாக்கும். ஆதலா லெம்முயற்சிக்கும் காரணம் விருப்பமேயாம். இதனையே ஸங்கற்பமென்பார் மேலோர். உதாரணமாக இன்பரசத்திற் கிடமானவோர் சேதனனிடத்து அச்சுவைக்குவிஷயமான ஓர் மங்கையைப்பற்றி விருப்பமுண்டாங்கால் அதற்கு அம்மங்கையினது அழகு முதலியன ஏதுவாவதுபோல இதழினிமை முதலியனவும் ஏதுவேயாதலால் சுவைக்கப்படுவனவான பதினைந்து சுவைகளும் விருப்பமென்றதோர் சுவைகொண்டு ஆன்மாவிடஞ் சென்றுஅம்மங்கையை மணக்க ஏதுவாதலால் அதுவே பரம்பரையில் சரீர ஏதுவாம். ஆகவே ரசம் சர்வஹேதுவாகின்றது. அதனாலேயே ரசேசுவரசித்தாந்திகள் எல்லாம் ரசமயமேயெனவும், பிரம்மமும் அதுவேயெனவும் துணிகின்றனர். ஆகவே சரீரத்துள்ள விருப்பமென்றரசத்தால் இனிமைமுதலிய அறுவகைச்சுவைகளுள்ள பொருள்களருந்தப்பட அவைகளெல்லாம் சரீரத்தில் உட்சென்று சொன்று பித்தம்முதலியவற்றுணமைந்த இனிமை புளிப்பு முதலியபொருளால் பரிபாகப்பட்டு பிந்து ரூபமாய் முடிய மனதிற்றோன்றும் இன்பச்சுவையால் புருடன் சொரூபச்சுவையானவிருப்பம் இதழினிமை முதலிய பல்சுவை நிறைந்த பெண்களை மணக்கச்செய்ய மெள்ள அவ்வீரியம் ஆடவரைவிட்டு, மகடூக்கள் கருக்குழியடையும். ஆகவே உலகத்தில் ஓர்சரீரமுண்டாம். அங்ஙனமாயின், ஆன்மாவிடத்து விருப்பமாயும் சுவைக்கப்படும் பொருள்களிடத்து இனிமைமுதலிய அறுசுவைகளாயும், சரீரத்தவைகளைப்பாகஞ்செய்யுமச்சுவைகளையும் திரிந்து சகலத்துக்கும் சரீரபுஷ்டிக்குமேதுவாய்மனதில்இன்பமாய்மாதரைக்கலக்கச்செய்து மேற்கண்ட எல்லாச்சுவைகளுக்குமிடமான ஓர் சரீரத்துக்கேதுவாய் நிற்றலின், அதுவே சர்வஹேதுவாமென்றோம். காரணமும் காரியமும் சுவைப்பதும், சுவைக்கப்படுவதும்; இரண்டும்ரசங்களேயாதலின், இவையொன்றையொன்றுடற்றும், ஆகவே தாமமைந்தாற்போல் தம்போன்ற ஓர் தொகுதிக்கேதுவாம் என்றது, இம்மந்திரத்தின் கருத்தாயமைந்தது.

அவதரணிகை

இனிமுறையேதாதுக்களினுற்பத்தியைக்கூறுகின்றார்

ஷட்³விதோ⁴ ரஸோ ரஸாத்³ரக்தம்
ஶோணிதாந்மாம்ஸம் மாம்ஸாந்மேத³:
மேத³ஸோஸ்த்²ய ஸ்த்²நோ மஜ்ஜா
மஜ்ஜாயா: ஶுக்ரம்|| (எ—து)

(இ—ள்) அறுவகைரசங்களுள். சுவைகளால் ரக்தம் ரக்தத்தால்மாம்சம். மாம்சத்தால்மேதஸ், மேதஸ்ஸால் அஸ்தி அஸ்திகளால் மச்சை, மச்சைகளால் சுக்லம, (எ—று.)

(வி—ரை) அறுவகைரசமென்றது இனிமைமுதலியது விருப்பத்தின்வழி சரீரத்தையடைந்தது. அதனிடத்தில் ரக்தமென்பது முதல் சுக்லம் என்பதுவரைசேர்க்கவேண்டும். இதனாலேயே அஷ்டாங்கஹிருதயத்திற்கு வியாக்கியானம் செய்த அருணதத்தர் தாதுரசங்கள் ஆகாரரசங்களுடன் ஒன்றுபட்டு', என்றுதாதூத்பத்தி கொண்டனர். இங்குசேகவரர்கொண்ட சித்தாந்தம்வறுமாறு: சுத்தமானபிரம்மத்திற்கு, உலககாரணமான சோபாதிக சொரூபம் ரசமெனப்படும். அதையே ஈக்ஷணம், பிரஞ்ஞை, தவம், காமம்முதலிய சொரூபங்களால் நிரூபிக்கப்படும். "(க) ஸ ஈக்ஷத ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி, (உ) ப்ரஜ்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ, (௩) தபஸா சீயதே ப்³ரஹ்ம, (௪) காமஸ்தத³க்³ரே ஸமவர்ததாதி⁴, (1) அஃதுகண்டது பலவாறு வேன் பிறப்பேனென. (2) ஆதியானபிரஞ்ஞை அவனிடத்துண்டாயது. (3) தவத்தால் பிரம்மம் பருக்கின்றது. (4) காமம் ஆதியிலிருந்தது." என்றுவேதங்கள் பலவாறாய் நிரூபித்தலால். அந்தரசமே புருடனிடத்து உட்பிரவேசித்து ரசமெனப்படுகின்றது. "யதேதத்ஸுக்ருதம், ரஸோ வை ஸ:, ரஸம் ஹ்யேவாயம் லப்³த்⁴வாநந்தீ³ ப⁴வதி — எது இதனிடத்துச் சுகிருதமாயுள்ளது அதுவேரசம், ரசத்தைப்பெற்றல்லவோ இவன் களிப்புறுகின்றான்" என்று வேதமங்ஙனம் அறைதலாலெனக. அதேரசம்எல்லாத்

திர்துக்களுக்கும் மூலமாய் கர்ப்பம் முதல் தொடர்ந்து நா
டோறும் புசிக்கப்படும் பொருள்களின் சூக்குமங்களான ரசங்க
ளாற்பருகுபிதாவின் சரீரத்தில் இன்பம்முதலியரூபமாய்த் திரிந்
து உறப்புமுதலியவற்றின் சொரூபத்தையும் ஏற்றுபதினைந்தமை
ப்புகளைப்பெறுகின்றது. இன்பநுகர்ச்சியைப்பயனாய்ப்பெற்ற தின்
பரசம்லௌகிக வின்பரூபமாய் ஆண்பெண்களை மருவச் செய்து
பிரகிருதி சிருஷ்டியேதுவாய் நின்றது. அஃது இன்பரூபமாய்நின்
று எச்சமயம் மங்கையரது ருதுகாலத்தில் ஆடவரைமணக்கச்
செய்யும், அன்றுமனதில் இன்பரூபமாய் சரீரத்துள்நிறைந்துஇரு
வருக்கும் சரீரத்தைமறக்கச்செய்து ஏகவின்பரசமாய்சொற்பகா
லம்இருவரை நிறுவித்து புருடன் இதயகோசத்தின்வழி அப்பு
ருடனுருந்திய பல்வகைவஸ்துக்களின் வழியுட்சென்று ஒரு சரீ
ரத்தை அவாவிநிற்கும் ஆவிரை முக்கியப் பிராணகோசங்களுடன்ச
ர்வசரீர யதார்த்தசாரபூதமான சுக்கிலத்திற்செலுத்தி அச்சுக்கி
லத்தை சரீரத்துள்ள தனஞ்சயவாயுப்பிரேரணைவசத்தால் சரீ
ரம்விட்டுவழுகச்செய்து அச்சரீரத்தைப்போன்ற அமைப்புக்கி
டமாக்கி அதோமுகப்படுத்தி பெண்களின் கருக்குழிசேர்க்கின்
றது. புருடசரீரத்திற்றானே ஆண்மை பெண்மை அலித்தன்மை
முதலிய புருடசரீரத்திற்றானே உண்டாம் என்பதைப்பற்றி பின்
னர்நிரூபிப்பாம். மீண்டும் அதேரசம் பெண்களிடத்திருந்துஅவர்
சரீரத்தில் காதலையுண்டாக்கி சுவைக்கப்படும் அறுவகைப்பொரு
ள்களைப்பரிபாகித்து அப்பொருள்களின் சாரத்தால் சோணிதத்
தைவிருத்திசெய்து அவர்சரீரத்தையடைந்த சுக்லத்திற்கேற்ற
வாறு பாகம் செய்விக்கும். அவ்விரசம் முதலில் ரக்தத்தையுண்
டாக்கும். ரக்தத்தில் மாம்சமுண்டாம். சரீரத்திற் சுவைக்கப்ப
ட்டபொருள்களில் அறுசுவைகளாலேயே ரக்தமுண்டாம் என்ப
தும் அதனிடத்தே மாம்சமுண்டாமென்பதும் வைத்தியத்திற்கே
ண்டதே. இனிப்பு முதலிய அறுவகையை முன்காட்டினோம். மே
லும் ரசசித்தாந்திகள்வேறு அறுவகை ரசங்களைப்பிரிப்பதுமுண்டு
மஹாரசம், ரசம் என்ற இரண்டுசேதனரசங்களும் காமம் = (விருப்
பம்) ஸாரம் (வலிமை) தாது (ரக்தம்முதலியன) ரசம் (சுவைகள்)
என்று நான்கு அசேதன ரசங்களும், ஆக ஆறு. சேதன ரசங்களு
ள்மஹாரசமென்றது ஸர்வஜகத்காரணமானபிரம்மம். ரசமென்ப

துஜீவன். விருப்பம்முன்னரே நிரூபிக்கப்பட்டது. ஸாரமென்பது ஸர்வபதார்த்தத்திற்கும் ஆதாரமாம். அதனையே பாரதமென்பர். அது எல்லாப்பூதங்களினம்சமுள்ளதென்றும், ஸர்வசித்திகளையும் கொடுப்பதென்றும், ரசசாஸ்திரங்களில் விரிவாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ரத்தத்தின்பூர்வாவஸ்தையாயுள்ளது ரசதாதுவாம். தான் சுவைத்தபொருள்களின் பரிணமத்தாலமையும் அறுவகைச்சுவைகளோ ஸ்பஷ்டம். மற்றது வேறிடத்தில் மஹாரசம்முதல்அறுசுவைகள்வரையுள்ளஅறுசுவைகளினின்றுபிரத்தியட்சமானரத்தம் உண்டாகின்றது. அதினின்று மாம்சம் முதலியன உண்டாகும்முறைகளை வைத்யசாஸ்திரத்திலும் ரசேசவர சித்தாந்தத்திலும் கண்டுகொள்க.

அவதரணிகை.

அதனையேவிரித்துரைக்கின்றார்.

ஶுக்லஶோணிதஸம்யோகாத்
ஜாயதே கர்பஸம்ஜ்ஞகே ஹ்ருதி வ்யவஸ்தாம் நயதி
ஹ்ருதயே ஸஞ்ஜாத வஹ்நி: |
அக்நிஸ்தாநே ச பித்தம் ||
பித்தஸ்தாநே வாயு: |
வாயுஸ்தாநே ஹ்ருதயம் || (எ—கூ)

(இ—ள்.) சுக்லசோணிதங்களின் சேர்க்கையால் கர்ப்பமானது இருதயத்தில் உண்டாகின்றது. வியவஸ்தையுண்டாக்குகின்றது. இருதயத்தின் உட்புறத்தி லக்கினியுண்டு. அக்கினிஸ்தானத்தில் பித்தத்தைச் சேர்ப்பிக்கும். பித்த ஸ்தானத்தில வாய்வந்து சேரும். இதயத்தை வாயுஸ்தானத் திலமைக்கு மென்பது.

(வி—ரை) தனித்தசுக்லமாவது சோணிதமாவது கர்ப்பத்துக்கேதுவாகாதுபற்றி அவ்விரண்டும் சேர்ந்தே கர்ப்பமுண்டாமெனக் குறிக்கின்றார்— கர்ப்பமென்பது விருத்தியடையக்கூடிய சரீரத்தின் விதையாயுள்ளது. ஒவ்வொருவிதைக்கும் முளைக்குர்

பீஷமென்ற அம்சந்துக்குமேல் நெருங்கியதோர் ஆவரணமிருக்க
வேண்டியது அவசியமாதலால் சுக்கிலத்திற்கு சோணிதமவசியமி
ருந்தே காரியமுண்டாகவேண்டும். அரிசிபோன்ற சுக்கிலத்திற்கு
உமிபோன்ற சோணிதாவரணமில்லாவிடின், அது கர்ப்பமாகா
தென்பது கருத்து- அது ஒவ்வொரு சரீரத்திற்கும் வேறுபடும்
கர்ப்போற்பத்திவரையில் புருஷசரீரத்திற்றனே விதைமுதிரு
ம் நியாயத்தால் சுக்கிலமும் சோணிதமும் கலந்து பரிபாகத்தைய
டையும். இங்கு அறியவேண்டியவைத்தியரகசியம்வருமாறு—ஒவ்
வொருசரீரமும் ஸ்திரீபாகம் புருஷபாகம் என இரண்டும் கலந்த
தே. புருஷசரீரத்தின் இடது புறத்தைஸ்திரீபாகமென்பார்கள். அ
தனிடத்திற்சோணிதம் பரிணமிக்கும். ஆகவே அப்பாகம் நிலமும்வ
லதுபாகம் பீஜரூபமும ஆகும். இதனையாரியாசாரரகசியத்தில் வி
ரித்துக்காட்டினோம். புருஷசரீரத்தில் உள்ள சுக்கிலதாதுவில்
சோணிதாம்சமும் சேர்ந்தாற்றான் அது மற்றொரு சரீர ஏதுவா
ம். மேல்தோல் விலகியாவது உண்டாகாநிலைமையிலாவது உ
ள்ள விதை முளையையுண்டாக்குவதில்லையென்றோம் அங்ஙன
மே இஃதுமென்க- புருஷசரீரத்திலுள்ள சுக்கிலத்திற்றனேசோ
ணிதபாகமும் கலந்திட அது இதயஸ்தானத்தை யடைந்துகர்ப்
பமென்றபெயரைப்பெறும் விலஸ்தையடைகின்றது. முதலில் வே
றொருசரீரத்தையுண்டாக்கவைக்கத்தக்க அமைப்பைப்பெறுகின்ற
து. இதயம்என்பதுசாண்டுஇருபத்தாறுதுறட்டெலும்புகட்குள்ளசஞ
ற்சேமித்துவைக்கப்பட்டதும், சிவந்தநிறமாய்ஐந்துதுளைகள்உள்ள
தும் சரீரமத்தியத்துக்கு சிறிது இடது புறத்தில் நிலைபெற்றஸ்தா
னமாம். அதனிடத்துமுற் கூறியபரசதாதுவாலும் (விருப்பத்தாலு
ம்) தனஞ்சயவாயுவாலும், சுக்கிலசோணிதங்கள் வந்துசேருகின்ற
னவென்பது கருத்து- மேல்கண்ட இதயம் சரீரத்துள்ளரத்தத்திலு
ள்ள மலத்தை நிவிர்த்தி செய்வதொன்றாகவே அத
னிடத்தே சுக்கிலசோணிதங்களும் கலந்துசென்று கர்ப்பமாமெ
ன்பதுநியாயமாம்இனிமேலே [illegible] ஜாவசத்து [illegible] காலெ—பிரா
ஜாபத்தியருதுகாலத்தில் என்று தொடங்கிஸ்திரீகர்ப்பப்பிரவேசத்
தைபிந்துவுக்குச்சொல்லப்போகின்றமையால் இங்குசொல்லும்பரி
பாகங்களெல்லாம் புருஷசரீரத்திற்றனென்றேற்படுகின்றது இங்
கு சுக்கிலசோணிதங்களின்பாகம் கர்ப்பவேதுவென்றது புருஷகர்ப்

பத்திற்றான். சரீரத்துள்ளவேழுதாதுக்களைக்கணக்கிடுமிடத்துசுக்கிலமென்றது சோணிதத்தையும் கலந்தே நிரூபிக்குமாம் ஆதலாற்றானே பெண்களின் சரீரத்துக்கும் சுக்கிலமே ஏழிலொன்றாகதாதுக்களில் குறிக்கப்பட்டது. உண்மையில் ஒவ்வொருவிதையும் ஒவ்வொரு ஆவரணமின்றி முளைக்காதுபோல, சுக்கிலமும் சோணிதமுமில்லாது முளைக்காதென்றோம். புருஷர்களின் பீஜங்களிரண்டின் இடதுபுறத்தில் பரிபாகமடையும் சுக்கிலம் சோணிதபாகம் அதிகமுள்ளதாதலால் அதினாலுண்டாவது பெண். வலதுபுறத்தில் பரிபாகமடையும் சுக்கிலத்திற் சோணிதபாகம் குறையுமாதலால் அதனாலுண்டாவது ஆண். இது மூன்றுமாசங்களில் பரிபாகத்தையடையுமென்று மூதறிஞர் கண்டார். அங்ஙனம் பரிபக்குவமாய் பீஜத்தில் இருக்கும் பிந்து ஆடவர் பெண்களிடத்து காதலுடன்கலக்குங்கால் ஓர் புறத்துபீஜத்திருந்துபிந்துமேனோக்கிச்சென்று ஸர்வசரீரஸாரபூதமானரசதாதுவால் தனஞ்சயனென்ற வாயுப்பிரேரணையாற் கவசமிடப்பட்டு இதயத்தைச்சேரும். இரண்டிடத்தும் பரிபாகக்குறைவுள்ள பீஜங்கள் சமமாகமேனோக்குவதுமுண்டு. இதயத்தினிடத்து ஓரக்கினியுண்டு. அது உஷ்ணரூபம். பெண்களிடத்துண்டாம் விருப்பமென்றது காமாக்னியெனப்படும். மனதினிடத்துஸங்கற்பரூபமான சைதன்யப்பிரதிபிம்பாக்கினியொன்று. இம்மூன்றக்கினியும் மேற்கண்ட இதயஸ்தானத்திலே அக்கருவின் கல்பித்தத்தை [illegible] செய்கின்றது-பித்தஸ்தானத்தில் = பித்தத்திற்கிடமாய் அக்கருவின் கண்ணே. பித்தம்தோன்றினவக்கணத்தே வாயு = முற்சரீரம்விட்டது முதல் அக்கணம் வரை ஆன்மாவைப்பற்றிவந்த ஒன்பதுவாயுக்கள், இங்கு இவ்வொன்பது வாயுக்களொகாதியொருமைபற்றிக்குறித்தது அதனிடத்துக்கட்டுண்ட ஜீவனுக்குமுபலக்கணமாம். பிறகுவாயு = தனஞ்சயமென்ற ஸர்வசரீரவியாபகமானவாயு. இது புருஷசரீரத்துள்ளதே. இதயத்தைமுற்குறித்த, ஐந்துதலைகள் முதலிய இலக்கணங்கள்கூடியஇதயத்தை (மாமசபிண்டத்தை) அமைக்கின்றது = ஐந்துமுளைகளுடன் (தலையும் இருகாலும் இருகைகளும் முளைகளாம்) கூடிய கர்ப்பத்தையமைக்கத்தக்கநிலைமையில் சுருக்குகின்றது என்பதுதாத்பரியம். இதனால் இதயத்தில் விவஸ்தையுடையச்செய்கின்றதென்பது விரிக்கப்பட்டது.

அவதரணிகை.

இனிமேல் நடக்கும் முறையைக்கூறுகின்றார்,

ப்ராஜாபத்ய ருதுகாலே ஸம்யோகத்
ஸுக்லாஸ்ர வாநிதம் கலலம் பவதி ॥ (என்று)

(இ—ள்.) பிராஜாபத்திய ருதுகாலத்தில் விநியோகி பட்டு ஒருதினம் பூர்ணமானால் கலலமாகும்.

(வி—ரை.) பிரஜைகளுக்குப்பதிபிதா. ஆதலால் அவனது தன்மை உத்பாதகத்துவமாம். அதாவது கர்ப்பத்தையுண்டாக்குமாற்றலென்க. பெண்களுக்கு எந்தக் காலத்தில் கர்ப்பத்தையேற்றுவளர்க்கும் சவுகரியம் சரீரத்திலமைகின்றதோ அதுவே பிராஜாபத்தியருதுகாலமாம். மாதவிடாய்முதல் நான்காவது தினம்தொடங்கிய பதினாறும் தினம்வரையில் அக்காலமென்று உண்மையறிந்த மூதறிஞர் கூற்று. அச்சமயத்தில் சம்பந்தமடைதலால் முற்கூறிய பிந்து சோணிதத்திற் கலக்க ஒருதினமிருக்கும்பொழுது கலலமாகின்றது. இவ்வவஸ்தைகபத்தைப்போல் அதிக்கடினமல்லாததும் ஓட்டமற்றதும் இளந்தோற்போலவுள்ளது. இதனை நஞ்செனவழங்குவார். இதில் சரீரமாய்ப்பரிபாக மடைந்தது போகச்சிறிதுபாகம் எஞ்சிநிற்க பிரசவகாலத்தில் குழந்தைக்கு முன்னாவது பின்னாவது வெளிவரும். இதுபுருஷவீரியக்கலந்தசோணிதத்தின் பரிபாகமாதலால் பிரசவபரியந்தம் ஸ்திரீகளுக்கு பிரதிதினம் போஜனத்தாலுண்டாகும் சோணிதாம்சம் கர்ப்பத்திற்கலந்து அக்கர்ப்பத்தினம்சமாய்ப்போனதுபோக எஞ்சினதே அச்சமயம் வெளிவருகின்றது. இங்குசிலர் ஏழுதினத்திற் கலலமென்றும், சிலர் ஐந்துதினத்திற் கலலாவஸ்தையென்றும், சொல்லுவார்கள். அங்கு கலலமென்ற சொல்லுக்கு தோலும் பையும் என்னும்பொருளாதலால் மெது, கடினம், மிக்ககடினமென்ற பாகவிசேஷங்களையதன்பொருளாய்க்கொண்டு அவைகளின் பொருளொற்றுமைகூறுக. இங்கு சிறுபைபோல் இருப்பது பொருளாய்க்கொள்ளின், தோல்போன்றது ஐந்துதினங்களிலும், என்புபோன்றது ஏழுதினங்களிலுமென்று ஒருவாறு கொள்ளலாம்.

அவதாரணிகை.

இனிமுறையைக்குறிக்கின்றார்.

𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌷𑌿𑌤𑌂 𑌬𑍁𑌦𑍍𑌬𑍁𑌦𑌂 𑌭𑌵𑌤𑌿 ।
𑌅𑌰𑍍𑌧𑌮𑌾𑌸𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌪𑌿𑌣𑍍𑌡𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥
𑌮𑌾𑌸𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌕𑌠𑌿𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿 ।
𑌮𑌾𑌸𑌦𑍍𑌵𑌯𑍇𑌨 𑌶𑌿𑌰𑌃 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 ॥
𑌮𑌾𑌸𑌤𑍍𑌰𑌯𑍇𑌣 𑌪𑌾𑌦𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍋 𑌭𑌵𑌤𑌿 ।
𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌜𑌠𑌰𑌕𑌟𑌿𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥
𑌪𑌞𑍍𑌚𑌮𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌪𑍃𑌷𑍍𑌠𑌵𑌂𑌶𑍋 𑌭𑌵𑌤𑌿 ।
𑌷𑌷𑍍𑌠𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌨𑌾𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥
𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌜𑍀𑌵𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 ।
𑌅𑌷𑍍𑌟𑌮𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥
𑌨𑌵𑌮𑍇 𑌵𑍀𑌵𑌰𑍍𑌤𑍇 । (என்று)

(இ—ள்.) ஏழுதினங்களிருந்தால் நீர்க்குமிழிபோன்றதாகும். பதினைந்துதினங்களுக்குள் பிண்டமாகும். மாசத்திற்குள் கடினமாகும். இரண்டுமாதங்களில் தலை முளைக்கும். மூன்றுமாஸங்களில் காலுண்டாகும். இனி நான்காம் மாதத்தில் வயிறு, இடை இவையுண்டாகும். ஐந்தாம்மாதத்தில் முதுகெலும்புண்டாகும். ஆறும்மாதத்தில் மூக்கு, கண், செவிகள் உண்டாகும். ஏழாம் மாதத்தில் ஜீவனை யடைந்ததாகும். எட்டாம்மாதத்தில் ஸர்வசம்பூர்ணமாகும். ஒன்பதாம் மாதத்தில் பருக்கும். (எ—று)

(வி—ரை) நீர்க்குமிழியென்றது முற்கூறியகலலத்திலும் சிறிது கடினமாயுள்ளது. அமைப்புமட்டிலும் இந்தத்திருஷ்டாந்தம் கூறப்பட்டதென்க. பிண்டமென்பது அதிலும் சிறிது கடினம் அதிலும் கடினமான அவஸ்தை இங்குகடினமெனக் குறிக்கப்பட்டது. காலுண்டாமென்றது கைக்கு முபலக்ஷணம். முதுகெலும்பென்றது எல்லாஎலும்புகளுக்கும் குறிப்பு. மூக்கு முதலியன ஸமஸ்தலட்சணபரிபூர்த்தியைக் குறிப்பன. ஜீவனையடைந்தது = சுஷுப்தியிலிருப்பதுபோல முற்றும் மயங்கியிருந்தநிலைமையை விட்டுசொப்பனம்போன்ற ஸ்திதியைப் பெறுவானென்பது கருத்து.

ஸர்வஸம்பூர்ணம் என்றது, சிந்தை முதலிய மனோவியாபாரங்களையும் குறித்தது. இங்கு சல்லியதந்திரத்தில் விரோதம் சிறிதுண்டு. ஆயினும் அதுகுற்றமல்ல. இச்சாத்திரத்திற் கதனிடத்தே தாத்பரியமின்மையால் இங்கு குறிக்கப்பட்ட அவஸ்தையெல்லாம் தூலங்களேயன்றி சூக்ஷுமங்களல்ல. ஆகையால் தேசபேதத்தாலும் காலபேதத்தாலும் ஆகாரபேதத்தாலும் மற்றயபேதங்களும் சம்பவிக்கவேண்டுமென்றறியவேண்டும்.

அவதரணிகை

இனி பீஜத்திற்றானே சுக்லசோணிதங்களைப்பிரித்து ஆண் பெண்முதலிய ஜனனங்களின் வேற்றுமைகளுக்குக்காரணத்தைக் காட்டுகின்றார்.

ஶுக்லம் பும்ஸாம் ஶோணிதம் ஸ்த்ரீணாம்
உபயம் க்லீபம்
பித்ருரேதோதிரேகாத் புருஷோ பவதி
மாத்ருரேதோதிரேகாத் ஸ்த்ரியோ பவந்தி
ஸ்த்ரியோ ஹி காமிந்ய: தாஸாம் ஸுகாதிக்யாத்
தா ஏவ பஹவோ பவந்தி
உபயோர் பீஜதுல்யத்வே நபும்ஸகோ பவதீதி ||

(இ—ள்.) சுக்கிலம் புருஷபாகம். சோணிதம் ஸ்திரீ பாகம், இரண்டும் நபும்ஸகம். தகப்பன் ரேதஸ் அதிகமானால் புருஷனாகும். தாயின் ரேதஸ் அதிகமானால் ஸ்திரீயாகும். பெண்களன்றோ காமினிகள். அவர்களுக்குச் சுகமதிகமாதலால் அவர்களே யதிகமாய்ப்பிறப்பார்கள் இருவருக்கும் பீஜம் சமமானால் நபும்ஸகமாகும்.

(வி—ரை.) புருஷசரீரத்திற்றானே வலதுபுறமும் இடதுபுறமும் புருஷபாகமும் ஸ்திரீபாகமும் என்று நிரூபித்தோமாதலால் அங்குள்ள புருஷபாகபீஜத்தின் பிந்துவே சுக்கிலமெனவும், ஸ்திரீபாகபீஜபிந்துவே சோணிதமெனவும் ஏற்பட்டது. ஆகை

யாவிப்பிரகரணத்தில் இதரசாஸ்திரப்பிரசித்தமான சுக்கிலசோ ணிதங்கள் இவ்விடத்தில் கிராஹ்யமன்றெனவும், மற்றுசங்கேத மாய் முற்கூறிய புருஷசரீரத்துள்ள பிந்துக்களே அங்ஙனமாமெ னவும் இவ்வசனம் குறிக்கின்றது. இதனால் இம்மந்திரத்திற்சொ ன்னபிரகாரம் புருடரது பீஜகோசத்தில் வலதுபுரம் புருஷபாக மும் இடதுபுறம் ஸ்திரீபாகமும் ஆதலால் வலதுபாகத்தின் பிந்துமலிந்தால் புருஷபாகமும் இடதுபாகத்து பிந்துமலிந்தால் ஸ்திரீசரீரமாகவும் இரண்டுபுறமும் மலிந்தால் அது நபும்ஸகமாக வும் ஆகுமென்று இவ்வசனங்களின் கருத்தாம். அற்றேல் புருஷ பாகம் ஸ்திரீபாகம் என்ற சப்தங்களுக்கு புருஷஸ்திரீகளே அர்த் தங்களாகக்கொண்டு பொருள்கொள்ளக் கூடாதோவெனின் கூ டாது. அங்ஙனமாயின் புருஷபாகமென்றும் ஸ்திரீபாகமென் றும் பாகசப்தம் வியர்த்தமாமாதலாலென்க. மேலே "வி த்ரு ம ணா வ ஜா தகப்பன் குணத்தையனுசரிக்கும்பிள்ளை"யெனமே ல்கூறப்புகும்பொருள்விரோதிக்குமாதலால்யாம் கூறியபொருளே நியாயமாமென்க. மேலேவரும் பிதுருஎன்ற சொல்லுக்கும் பெற் றோர் இருவரையும் பொருள்கொள்ளக் கூடாதோவெனின், கூ டாது. துவக்கத்திற்றானே சுக்லசோணிதசம்பந்தத்தால் கெர்ப்பமு ண்டாமென்று புருஷகர்ப்பத்தை வர்ணித்தவாக்கியம் அசங்கதமா கநேரிடுமாதலாலென்க. இங்கு மபிதா மாதாவென்ற பதங்களைப் புருடர்களின் இடதுபுறம் வலதுபுறம் என்றபொருள் கொண்டே முடிக்கவேண்டும். ஆகலாற்றான் மனுமுதலியோரருளிய சாஸ்தி ரங்களிலும், "க்ஷேத்ரு ஹு தாஷ்ரு தா நாரீ பீஜஹு தஸ்ம்ருத: ஸம்யோகாது ஸர்வ தேஹினாம்" என்ற தெ "க்ஷேத்திரம்போன்றதுபெண்களும் விதைபோன்றது புருடனு ம் என்றும், எவ்விதம் விதைவிதைக்கப்படும் அங்ஙனமே முளைக் கும்" என்றும் பலவாறாய் நிரூபிக்கப்பட்டுள்ளது- அங்ஙனமாயி னும் பெண்களதிகமாய்ப்பிறப்பதற்குக்காரணத்தைக்காட்டுகின்றா ர் பெண்களென்பதாதியால்- பெண்களுக்குச்சுகமதிகமாதலால் அவர்களேகாமரசமிகுதியால் ஆண்மக்களைவசப்படுத்தி தம்மிடம ணுகச்செய்வார்கள். பெரும்பான்மையில் பெண்களுடையரூபலாவ ண்யயௌவனங்களில் மயக்குற்றமாந்தர்க்கே அவரை மணத்தலில்

முயற்சியுண்டாவதால் அவர்சித்தவிர்த்திபெண்மயமாய் நிற்றலுசி தமாதலால் பெண்களதிகமாய்ப்பிறப்பதே நியாயமாம். தன்கர்மத்தாலும் சந்தானவாசையாலும் பெண்களிடத்துப்பிரவிர்த்தி சிறுபான்மையாதலால் ஆண்மக்கள் எங்கும் குறைவாய்ப்பிறப்பார்கள் 'தகப்பன்ரேதஸ்' என்பதாதிவாக்கியங்கள் சுக்கிலம் புருஷபாகம் என்பதாதி வாக்கியங்களுக்கேயோர் சிற்றுரையாம்-

அவதரணிகை

குழந்தைகளின்சரீரம் விகாரம்முதலியவற்றையடைவதற்கேதுவைக் குறிக்கின்றார்.

[illegible]
[illegible] ॥ என்று

(இ—ள்.) விருத்திக்குத்தக்கவாறு பிரவிர்த்தி. ஆகவேதகப்பனுக்கேற்றவாறு பிள்ளைபிறக்கும்.

(வி—ரை) விர்த்தியென்பது புருடர்களின்விருப்பம்=முயற்சி. "எனக்குப்பிள்ளையுண்டாகவேண்டும், எனது காமம் பரிபூர்த்தியடையவேண்டும், காதலிமனம்களிட்புறவேண்டும்" ருதுகாலத்தில் பத்தினியைமணப்பது பரமதர்மம். அதனை விடலாகாது என்பதாதி பலவகைப்பிரவிர்த்திகள் பிதாவுக்குண்டாகக்கூடுமாதலின் தர்மகாமாதிகள் விசித்திரப்பிரவிர்த்தியுள்ள குழந்தைகளுண்டாகுமென்பதிதன் கருத்து.

அவதரணிகை

அதனையே விரித்துரைக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible] ॥ என்று

(இ—ள்.) மனக்கலக்கமடைந்த தகப்பன் தாய்களுக்கு குருடர் மொண்டிகள், கூனர், குட்டையர், அதிகாங்கமுள்ளவர் பிறப்பார். புஷ்பவான்கள் ஒருவருக்கொருவர் ஆசையுடன் புணர அங்கக்குறைவுளோர் பிறப்பார். காலம், தேசம், கிரியை, திரவியம் போகோபாதிகள் இவைகளால் விர்த்தியடைந்தவரும் விர்த்தியடையாதவரும் அனுரூபரும் அனனுரூபருமாய்ப் பிறப்பார்கள். நன்றாகசம்பக்தித்தால் சரூப்பியத்தையடைந்து சமானகுணர்களாகின்றார். பிம்பத்திற்குபாதியில் பிரதிபிம்பம்போல. (ஏ—து)

(வி—ரை.) குருட்டுத்தனம் முதலிய சரீரவிகாரங்களெல்லாம் ஸ்தூலசரீரத்திலுள்ளதாதலால் ஆண் பெண் இருவர்களின்மனோவிகாரங்களையும் அது எதிர்பார்க்கும். ஆண் பெண்ணென்ற வித்யாசம்மட்டில் புருஷபிந்துவிற்றான் அமையும். இதனையேயிறுதியில் பிம்பத்திற்குபாதியில் பிரதிபிம்பம்போலவெனக் குறித்தார். என்பது முடிந்தகருத்து. பிம்பம் = தன்னுடைய பெலத்தால் பிந்துவினிடத்து கற்பிக்கப்படுவதான தாய் தகப்பன்களுக்குச் சமானமான வோரமைப்பு- அத்தனையுஞ்செயல் ஆண்பெண் இரு சரீரங்களிலுமிருத்தலால் தகப்பன் சரீரத்தினின்று ஆண்பெண் என்ற வேற்றுமையைமட்டுமுண்டாக்கும். தாய் சரீரத்தினின்று ஸர்வசரீரத்திலும் வியாப்தமான வாரமான சோணிதத்தை அவர்களின் 'கருக்குழிசெலுத்தி வாய்பிளந்த சிப்பிபோல் அச்சரீரத்துக்குச் சமானமான அமைப்புள்ளதாய்ச் செய்துவைக்கும். அது அங்ஙனம் செய்வதில் மனமும், துணைக்கருவியே யாதலாலும், அம்மனமும் ...ஷவாவஷை... ஷவிய... [illegible] ஷ' விய கா., ... ஷவிப: = அவ்வியனும் புருடனைப்போன்றவனே, மேற்கோசத்துப்புருஷத்தன்மையை அனுசரித்து இதுவும் புருஷத்தன்மையுடையதாம்,' என்றுவேதம்

களாறைதலால் பிராணமயகோசம்போன்ற புருஷாகாரமே மனோமயகோசத்திலுமுளதாதலால் அக்கோசத்தில் தனஞ்செயத்தின் விபரீதகெதியால் ஓர் குறைவுண்டானால் பிந்துவினிடத்தும் அதன்வழித்தோன்றுமமைப்புகளும் அங்ஙனமே யாகுமாகலால் இவருக்குமுள்ள மனோவிகாரங்கள் "குருடர் முதலிய விபரீதசிருஷ்டிகளுக்கேதுவெனக் குறிக்கப்பட்டன. இனி ஒரேகாரணத்தால்பல்வகைவிபரீதங்கள் உண்டாவது யாங்ஙனமெனக்கூறுதும்: மனோமயகோசத்தின் கண்ணே எந்த அவயவத்தில் குறைவுநேரிகின்றதோ பிம்பத்தில் நேர்ந்த அக்குறைவு பிரதிபிம்பமாகிய பிந்துசரீரத்திலும் அமையுமாதலால், அது பொருந்துமென்க. புஷ்பவான்கள் = பரிபாகமடையாத பிந்துவுடையோர். இங்கு இருமையென்ற த்விவசனத்தால் பெற்றோரிருவர்க்கும் புஷ்பத்தைக் குறித்தமையால் ஆண்மக்களுக்கும் பெண்களுக்குப்புஷ்பகாலம்போல பிந்துபரிபாகமடையும் காலமொன்றுண்டென்றேற்படுகிறது. அதற்கு வெளிக்குறி ஏதுமில்லையாகலால் அதனையறிவதுமிகக்கடினம். அதனை வேறாக எடுத்து முற்கூறிய குற்றங்கள் இருதிறத்தார்க்கும் தனித்தனியே இருப்பினும், சரீரத்தின் குறைக்குஏதுவாமெனவும் இஃது இருவருக்கும் சேர்ந்தாற்றான் அங்ஙனமாமெனவும் குறித்தற்கே. இதனாற்றான் பெண்களின் விடாய்க்காலம் முற்றும் ஸம்பந்தத்திற்குக் கூடாதென விலக்கப்பட்டது. எச்சாதியார்இந்தவிலக்கை யனுசரிப்பதில்லையோ அவர்களிடத்தில் விபரீத சிருஷ்டி பலவுளவாமென்பது பிரத்தியட்சமாம். பிராணமயகோசத்தையும், சரீரத்தையும் நடாத்தும் ஆன்மா மனோமயகோசசொரூபனென்று வேதப்பிரசித்தம். "மநோமய: ப்ராண ஶரீரநேதா = மனோமயன் பிராணசரீரங்களை நடாத்துவான்" என்பதாதி பலகாண்டலால். இதனால் மனோவிலாசக்குறைவும் பிந்துவின் பரிபாகக்குறைவுமே பெற்றோர்களிடத்திருந்து சந்ததிகளுக்குவிபரீதஹேதுவாமென்றதாயிற்று. இதனையே காலம் தேசமென்றதாதியால் விரித்துக்காட்டுகின்றார். புஷ்பமும் காரணந்தானேயென சங்கைநிகழ அதுவொழித்து அதுபோன்றமற்றவையும் காரணங்களே யெனக்குறிப்பதே காலாதிவாக்கியமாம். காலம் = பெண்களின் ருதுகாலம் முதலியனவும், புருடர்களின் பெலக்குறைவுள்ள காலம்முதலியனவும், ஜன்மநட்சத்திரம் பர்வம்முதலியனவு

மாம். தேசம் = தேவாலயம், நாற்சந்தி, சுக்கான்பூமி முதலியனவு மாம். கிரியை = வியாயாமம், நடைமுதலியன. திரவியம் = மத்தியம் மாம்சம்முதலிய கோதப்பிரகோபத்தையுண்டாக்கும் ஆஹாராதிகள். போகம் = ஒடிந்தபடுக்கைமுதலியன., காமசாஸ்திரத்தில் பிரசித்தமாய் உள்ளவிஷமகெதிகளான விருஷபம், குக்குடம், ஐம்முதலிய அவஸ்தைகளும் போகடதார்த்தமாய்க் கொள்ளலாம். ஸ்வகீயை பரகீயை முதலிய பேதங்களுபாதிகளாம். மற்றும் வய்து, சரீரம் முதலியவேறுகுணங்களின் ஒற்றுமையும் வேற்றுமையும். சிசுசரீரத்தின் விர்த்திக்ஷயங்களுக்குக்காரணமே. மேற்கண்டகாரணங்கள் நன்மைக்கேதுவானால் நல்லசந்ததிகளும் தீமைக்கேதுவானால் கெட்டசந்ததிகளும் உண்டாகுமென்பது இம்மந்திரத்தின் முடிந்தகருத்து. சாரூப்யமென்றது தாய் தகப்பன் இருவருள் ஒருவருடைய சரூப்யமே. "ஊ தாவா மாஜஜி தவோவா மாஜொ தவா:" | = தாயின்ரூபத்தையாவது தகப்பன்ரூபத்தையாவது பிள்ளைபெறுவான் என்றுதர்மசாஸ்திரம் கூறுதலால். குணங்கள் சமானமாய் உண்டாமென்பதுசரீரத்துள்ள ஆரோக்கியம் முதலான குணங்களைப்பற்றியே. சமதமாதிகுணங்களோபிறக்கும் ஜீவனது பூர்வகர்மானுகுணமாய் அமையுமாதலால். சரீரமும் அங்ஙனமேயாயினும், சமம்முதலியஆத்மகுணங்களில் பிதாவின் சரீராம்சம் சம்பந்திக்கக்கூடாமையாலும் அங்ஙனம் கூறப்பட்டதென்க. உபாதியென்பதுடெண் சரீரத்துள்ளகருக்குழியெனக் கொள்ளவேண்டும்.

அவதரணிகை.

இனி இரட்டைமுதலிய சந்தானோத்பத்தியின் ஏதுவைக் குறிக்கின்றார்.

ஊ நாரீ நாயவாசிவ்ரவிதா நா
ஸாஞெவிஜெ நாயதவைணவக:|
வீதாஷாகேநரொதாவிஷாஜெ
திஜ வநாஜெ ஊ விதாவக்கி ||

(இ—ள்.) ஒருவருக்கொருவர் வாயுபீடையுண்டாறைல் சுக்லமிரண்டுபட்டு இரட்டையுண்டாகும். தாய்தகப்பனிருவரும் அங்ஙனமாங்காலத்து பிந்துவின் பிரிவால் மேற்கண்ட மிசிரப்பிரஜைகள் அனேகமாகும்.

(வி—ரை) ஒருவருக்கொருவர் பிராணவாயுமுதலிய வாயுக்கள் வேறுபட்டு சங்கமகாலத்தில் ஒருசமயம் ஏதேனும் விபரீதமடைந்தால்பிந்து வைஇருமுறைகிளப்பிஇருமுறைதனஞ்செயத்தைத்துடிக்கச்செய்து இரண்டுவிதைகளை ஒன்றன்பின் ஒன்றாய் அதிசூக்குமமாய் சுருப்பையில் சேரச்செய்யும். அப்பொழுது இரண்டுண்டாம். பெற்றோர்கள்=மாதுருபிதுருபாகங்கள். அவற்றில் இரண்டிடத்தும் தற்செயலாய் மேற்கண்டபடி வாயுக்களின் மாறுபாடுகள் பலவுண்டாயின், மிசிரப்பிரஜையுண்டாம். மிசிரப்பிரஜையென்பது மனுஷ்யஜாதிகளுக்கு விபரீதமான பல்வகைச்சாதிகளைப்பெற்றது. பெற்றோர்களுக்கு பல்வகைபாவனைகள் சம்பவிக்குமாதலாலெனக. அல்லது மிசிரப்பிரஜையென்பது இரட்டையெனவும் பொருள்கொள்ளலாம். அனேகமாகும்= இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தென பலவாம். சுக்லசோணிதங்களின் சம்பந்தமில்லாதுழி எப்படிப்பிரஜைகளுண்டாமெனச் சங்கிக்கல்கூடாது. புருஷசரீரத்துள்ள சோணிதத்தைக்கொண்டு அது சம்பவிக்குமாதலாலெனக.

அவதரணிகை

இனி ஸ்திரீகளுக்கு கெர்ப்பாசயத்தில் பைகள்எவ்வளவு? எவ்வளவுவரை அதிகசந்ததிகளுண்டாகலாம். என்றசங்கையை நிவிர்த்திக்கின்றார்.

ஷட்கர்ப் ஸ்த்ரியசுவஸ
ஷட்காஸரயாணீ
த்வாதாஸாம்விந்
ஸஹஸ்ரஸஹஸ்ர க்ரீஷ்டி ॥

மாம். தேசம் = தேவாலயம், நாற்சந்தி, சுக்கான்பூமி முதலியனவு மாம். கிரியை = வியாயாமம், நடைமுதலியன. திரவியம் = மத்தியம் மாம்சம்முதலிய வாதப்பிரகோபத்தையுண்டாக்கும் ஆஹாராதிகள். போகம் = ஒடிந்தபடுக்கைமுதலியன. காமசாஸ்திரத்தில் பிரசித்தமாய் உள்ளவிஷமகெதிகளான விருஷபம், குக்குடம், ஜம்முதலிய அவஸ்தைகளும் போகடதார்த்தமாய்க் கொள்ளலாம். ஸ்வகீயை பரகீயை முதலிய பேதங்களுபாதிகளாம். மற்றும் வய்து, சரீரம் முதலியவேறுகுணங்களின் ஒற்றுமையும் வேற்றுமையும். சிசுசரீரத்தின் விர்த்திக்ஷயங்களுக்குக்காரணமே. மேற்கண்டகாரணங்கள் நன்மைக்கேதுவானல் நல்லசந்ததிகளும் தீமைக்கேதுவானல் கெட்டசந்ததிகளும் உண்டாகுமென்பது இம் மந்திரத்தின் முடிந்தகருத்து. சாரூப்யமென்றது தாய் தகப்பன் இருவருள் ஒருவருடைய சாரூப்யமே. “மாதுர்வாநுஜாயதே ரூபம் வா பிதுர்வாநுஜாயதே |” = தாயின் ரூபத்தையாவது தகப்பன் ரூபத்தையாவது பிள்ளைபெறுவான் என்றுதர்மசாஸ்திரம் கூறுதலால். குணங்கள் சமானமாய் உண்டாமென்பதுசரீரத்துள்ள ஆரோக்கியம் முதலான குணங்களைப்பற்றியே. சமதமாதிகுணங்களைபிறக்கும் ஜீவனது பூர்வகர்மானுகுணமாய் அமையுமாதலால். சரீரமும் அங்ஙனமேயாயினும், சமம்முதலியஆத்மகுணங்களில் பிதாவின சரீராம்சம் சம்பந்திக்கக்கூடாமையாலும் அங்ஙனம் கூறப்பட்டதென்க. உபாதியென்பதுபெண் சரீரத்துள்ளகருக்குழியெனக் கொள்ளவேண்டும்.

அவதரணிகை.

இனி இரட்டைமுதலிய சந்தானோத்பத்தியின் ஏதுவைக் குறிக்கின்றார்.

அன்யோன்யவாயுபரிபீடிதாநாம்

ஶுக்ரத்வைதவிதம் [illegible] ஸம்பவத: |

[illegible]

[illegible] ஸம்பவந்தி ||

(இ—ள்.) ஒருவருக்கொருவர் வாயுபீடையுண்டானால் சுக்கிலமிரண்டுபட்டு இரட்டையுண்டாகும். தாய் தகப்பனிருவரும் அங்ஙனமாங்காலத்து பிந்துவின் பிரிவால் மேற்கண்ட மிசிரப்பிரஜைகள் அனேகமாகும்.

(வி—ரை) ஒருவருக்கொருவர் பிராணவாயுமுதலிய வாயுக்கள் வேறுபட்டு சங்கமகாலத்தில் ஒருசமயம் ஏதேனும் விபரீதமடைந்தால்பிந்துவை இருமுறைகளாப்பி இருமுறைதனஞ்செயத்தைத் தடிக்கச்செய்து இரண்டுவிதைகளை ஒன்றன்பின் ஒன்றாய் அதிசூக்ஷ்மமாய் கருப்பையில் சேரச்செய்யும். அப்பொழுது இரண்டுண்டாம். பெற்றோர்கள்=மாதுருபிதுருபாகங்கள். அவற்றில் இரண்டிடத்தும் தற்செயலாய் மேற்கண்டபடி வாயுக்களின் மாறுபாடுகள் பலவுண்டாயின், மிசிரப்பிரஜையுண்டாம். மிசிரப்பிரஜையென்பது மனுஷ்யஜாதிகளுக்கு விபரீதமான பல்வகைச்சாதிகளைப்பெற்றது. பெற்றோர்களுக்கு பல்வகைபாவனைகள் சம்பவிக்குமாதலாலென்க. அல்லது மிசிரப்பிரஜையென்பது இரட்டையெனவும் பொருள்கொள்ளலாம். அனேகமாகும்= இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தென பலவாம். சுக்லசோணிதங்களின் சம்பந்தமில்லாதுழி எப்படிப்பிரஜைகளுண்டாமெனச் சங்கித்தல்கூடாது. புருஷசரீரத்துள்ள சோணிதத்தைக்கொண்டு அது சம்பவிக்குமாதலாலென்க.

அவதரணிகை

இனி ஸ்திரீகளுக்கு கெர்ப்பாசயத்தில் பைகள்எவ்வளவு? எவ்வளவுவரை அதிகசந்ததிகளுண்டாகலாம். என்றசங்கையை நிவிர்த்திக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ‖

(இ—ள்.) மனிதர்களுக்கைந்துபேசிகள். ஒன்றுசாதாரணம். இரண்டு சிலருக்குண்டு. பல, ஆயிரங்களில் ஒருவர்க்கே. எ—து.

(வி—ரை.) பேசிகளென்பன கெர்ப்பாசயத்தில் உள்ள கருப்பைகள். ஐந்தெனக்குறித்தது எங்கோ சில விகாரகெர்ப்பங்களைக்குறித்தே, ஆதலாற்றான் ஒன்று சாதாரணமென்றார். எங்கும் ஒருபேசியே சாதாரணமாய்க் கிடைப்பதாம். சிலருக்கிரண்டும்கிடைக்கும். ஆயிரங்களில் ஒருவர்க்கென்றது அதிக துர்லபமெனக்குறித்தற்கே. பலவென்றது காந்தாரி, சுமதிமுதலியவர்களைப்போல்நூற்றுக்கணக்கு ஆயிரக்கணக்கான குழந்தைகளுண்டாவதற்கேதுவான கெர்ப்பாசயங்களென்ற பொருளில். சிலர்ஐந்துபேசிகளுக்குமேலிருத்தல் அற்புதமேயாகுமென வொதுக்கிப்பலவென்றதற்கு மூன்று நான்கு ஐந்துகளெனப் பொருளுரைக்கின்றனர். அதுவும் பொருத்தமுடையதே. எப்பெண்களுக்கு இரண்டு மூன்றுபேசிகளிருக்கின்றனவோ, அவர்களுக்கு எப்பொழுதும் இரண்டுமூன்று குழந்தைகள் பிறப்பதில்லை. ஆண்மக்களுடைய சுக்கிலமும் இருவகைப்படுவதே அதற்கு மூலஹேதுவாதலால். ஆகவே புருடரிடத்துச் சுக்கிலம் இருவகைப்படுவதும், பெண்களுக்குபேசிஇரண்டிருப்பதும் சேர்ந்தே இரட்டைக்குழந்தைகளுக்கேதுவாமென்றேற்பட்டது. ஆதலாற்றான் இரண்டிலொன்றுசேராததனையால் எங்கும் சாதாரணம் ஒன்றேயென்றார். வைத்யசாஸ்திரத்தில் "[illegible] = கெர்ப்பாசயத்திலும் மூன்றேயுளது" என்று எல்லாப்பெண்களுக்கும்மூன்று கருப்பைகளுள்ளதாய் நிரூபிக்கப்படினும் அதுகாலபேதம்பற்றியதெனப்பொருள்கொள்ளவேண்டும். அவரே "[illegible] | [illegible] | = மூந்நூற்றறுபது அஸ்திகளுண்டெனவேதவாதிகள் நிரூபிக்கின்றார். மூன்னூறே அஸ்திகள் சல்யதந்திரத்தில் காணப்படுகின்றன." என்று அறுபதுஎலும்புகள் காலத்தால்குறைந்திருப்பதாய் நிரூபித்தனர். ஆதலாலெனக. சரீரங்களும் காலக்கிரமத்தால் குறைவதும் அங்குமைனங்கள் குறைவதும், யோஜனம் முதலியகுறைவதும், அனுபவித்ததேயாம். ஐந்து கர்ப்

பாசயங்களிக் காலத்தும்சிலவிடத்து அறிதாய்க்காணப்படுகின்றன நான்கு மூன்று இரண்டுகளும் சில பலவுள.

அவதரணிகை.

இனி யமளோத்பத்தியில் சுக்கிலம் பிரவேசிக்கும் முறையைக்காட்டுகின்றார்.

𑌅𑌸𑌕𑍃𑌨𑍍𑌨𑌿𑌷𑍇𑌕𑍇𑌨𑌾𑌧𑌿𑌕𑌾𑌙𑍍𑌗𑌾𑌸𑍍𑌸𑌮𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ,
𑌸𑌕𑍃𑌨𑍍𑌨𑌿𑌷𑍇𑌕𑍇𑌹𑍀𑌨𑌾𑌙𑍍𑌗𑌾𑌃
𑌅𑌸𑌕𑍃𑌦𑌾𑌧𑌾𑌨𑌤𑍋𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑍋𑌨𑍌𑌯𑌮𑌲𑌂𑌜𑌾𑌯𑌤𑍇 ।

(இ—ள்) அடிக்கடி நிஷேகத்தால் அதிகாங்கம் உள்ளவர்கள் பிறப்பார்கள். ஒருமுறை நிஷேகமானால் இளைத்த அங்கமுள்ளவர் பிறப்பார். அடிக்கடி ஆதானம் செய்தால் ஸ்திரீயோனியில் இரட்டைகளாகப்பிறக்கும். எ—று

(வி—ரை.) இங்குள்ள உண்மையிது: புருஷன் சரீரத்துள்ளபிந்து இருவழியாக ஸ்திரீசரீரம் செல்லும். ஒன்றைநிஷேகமென்றும், ஒன்றை கெர்ப்பாதானமென்றும் சொல்லுவார்கள். கெர்ப்பாதானமென்றது சந்ததியின் உத்பத்திக்கு ஏதுவாயுள்ளது. நிஷேகமென்பது உண்டானகெர்ப்பத்தை விர்த்திசெய்வது. சாதாரணமாய் அடிக்கடி சம்பவிப்பது நிஷேகமேயாதலாலும், அதனிடத்தே கர்ப்பாதானமும் சமபவிக்குமாதலாலும் அதனிடத்தே பிரதமஸம்ஸ்காரம் செய்யவேண்டுமென்றார் பலர். ருதுஸங்கமமெனவும், கெர்ப்பாதானமெனவும், இரண்டுஸம்ஸ்காரமென்றார் ஆசிரியர் விகனஸ். கெர்ப்பாதானமானவுடன் பன்முறை நிஷேகம் சேர்ந்தால் அதிகாங்கமாகும். ஒருமுறை கெர்ப்பாதானமும் ஒருமுறை நிஷேகமும் சேர்ந்தால் இளைத்தசரீரமாய் இருப்பான். ஆகையால் ஒருமுறையாதானத்தில் ஒரேப்பிரஜை. ஆதானமதிகமானால் இரண்டு, மூன்று, நான்கெனவர்த்திக்கும். இதனால் ஒருமுறை கெர்ப்பாதானமும் இரண்டு மூன்று முறைகள்நிஷேகமுமானால் பூர்ணாங்கமானவோர்குழந்தையும், இருமுறைமும்முறைநிஷேகமானால்பூர்ணாங்கமான இரண்டுமூன்று குழந்தைகளும் பூர்ண

மாய்உண்டாம்என்பதாயிற்று. இங்கு இரண்டுமுதலியசரீரங்களை உண்டாக்கத்தக்க பீஜம்உண்டாயின், அச்சரீரங்களெல்லாம் விருத்தியடையத்தக்க நிஷேகம் இல்லாவிடில், அக்கர்ப்பங்கள் நிலைபெறுதாகையால் பெரும்பான்மையில் அற்பவீரியர்களான இக்காலத்தவர்களுக்கு உண்டாம் மூன்று நான்கு முதலிய கெர்ப்பங்கள் பிறந்தவுடனாவது அதன் முன்னரேயாவது அபாவத்தையடைவது வழக்கமாயிருக்கின்றது.

அவதரணிகை.

இனி பூர்ண கர்ப்பலெட்சணத்தை நிரூபித்து உபக்கிரமத்தில் நிரூபித்தபடி சரீரலட்சணத்தை யதனிடத்திற்சேர்த்துக் காட்டுகின்றார்.

பஞ்சாத்மகஸ்ஸம்பூர்ண:
பஞ்சாத்மகதேஜஸாதிகந்தரஸாம்ஸ்ச |

(இ—ள்) ஐந்தாத்துமாக்களுடன் கூடி பரிபூர்ணனாவான். ஐந்தாத்துமாக்களுடன் கூடி தேயுமுதல் கெந்தரசங்களையும் பெறுவான். எ—து.

(வி—ரை.) “பஞ்சாத்மகம் பஞ்சஸ்வவஸ்திதாத்மகம் = ஐந்தாத்துமாக்களையுடையது, ஐந்துகளில் உள்ளது” என்றுஉபக்கிரமித்தபடி ஒன்பதாம்மாதத்தில் பூர்ணனாவானென்பது கருத்து. பூர்ணனென்றால் சரீரத்தால் சாதிக்கக்கூடிய எல்லாத் தொழில்களையும் செய்ய வலிமையுடையவனென்பதே. கெந்த ரசங்கள் = நிலமும் நீரும். தேயுமுதலென்றது ரூபமாம். ஆகவே தேயு அப்பு அன்மை என்ற மூவகைப்பொருள்களும் அமையப்பெறுவானென்பது கருத்து.

அவதரணிகை

அங்கங்கள் பரிபூர்ணமானபிறகு ஒன்பதாம் மாதத்திலேயே பூர்வஜன்ம ஸ்மரணத்தை நிரூபிக்கின்றார்.

ஸஜ்ஞாநத்யாநாப்யாமோங்காரம் விஜயதி |
ததேதேவைகாக்ஷரம் ஜ்ஞாத்வா
அஷ்டௌ ப்ரக்ருதய: ஷோடஶவிகாரா: ஶரீரே
தஸ்யைவ தேஹிநாம் நவமே மாஸே
ஸர்வலக்ஷணஸம்பூர்ணோ பவதி || (என்று)

(இ—ள் நல்லஞானத்தாலும் தியானத்தாலும் ஓங்காரமென்ற அக்ஷரத்தைச் சிந்திக்கின்ருன், அதனையேஏகாக்ஷரமென்று அறிந்து எட்டுபிரகிருதிகளும் பதினறுவிகாரங்களும் அவனைசரீரியாகும்பொழுது அச்சரீரத்தில இனி ஒன்பதாவது மாதத்தில் சர்வலக்ஷணபரிபூரணஞகின்ருன்

(வி—ரை) நல்லஞானத்தாலும = அக்காலம் உண்டான ஞானம் புலன் வழிசென்று எப்பொருள்களையைப்பற்ருதாதலானும் அன்றேதோன்றியமையால் அழியாவாற்றலுடைமையானும் அந்த ஞானத்தை நல்லதென்றது. பல்வகைப்பொருள்களைக்கவர்ந்துழன்று பழமையடைந்த ஞானம்என்றும் அங்ஙனமாகாது. (தியானத்தாலும்) = எப்பொழுது வெளிப்பொருள்கள் யாதும் கவரப்பட்டிலவோ அச்சமயம்மனம்தமது பூர்வானுபவங்களைச் சிந்தித்து ஆன்மாவின்ஸந்நிதியில் விகாரப்பட்டு பல்வகைச்சேதனசேதனஉலகங்களாய் விரிவது சொற்பனவஸ்தையிலனுபவிக்கப்படுதலின் இங்கும் முன்னிலைப்பட்டதோர் பொருளைக்கவற இயலாமைபற்றி அம்மனம் முற்பவத்தில் தாமனுபவித்த விஷயங்களையேதியானிக்க முயன்று ஓங்காரமென்றவெழுத்தை நினைக்கின்றது. ஆகலால் ஓங்காரத்தைச்சிந்தித்தலென்றல் ஓங்காரமே அன்றுமனதின் தோற்றத்திற்கு விஷயமாமென்பதுபொருளாயிற்று. விழித்துக்கொண்டுள்ள ஒருவனுக்கும் ஷண்முகீமுத்திரையால் கண் காது நாசி முகம் இவைகளையடைத்தடன் அநாகதநாதமெனவழங்கப்படும் சித்தியப்பிரணவசுரூபம் அனுபவத்திற்கு வருமாதலின் வெளிவாயுசஞ்சாரமற்ற அக்காலத்தில் பிரணவநாதம் கேட்கப்படுமென்ருர். கருப்பையாற் சூழப்பட்ட அக்கற்பபுருடனுக்கு பிராணவாயுவின்போக்குவரவு சுதந்திரமாய் இல்லாதுபற்றி ரேசகம் பூரகம் இவைமொழிந்தொழிந்துகேவலகும்பகமாய்

எஞ்சுங்கால் பிராணன் தேஜோமயமாய் பிரணவமாத்திரத்தைப் பிறப்பிக்குமென்பது ஆன்றோர் கருத்து. ஆத்மமந்திரமாகிய ஹம்ச மந்திரமும் பிராணத்தின் போக்குவரவுகளைப்பற்றி நிகழ்வதாதலால் கருப்பையைவிட்டுக் கழன்ற பிறகே. அம்மந்திரமமையுமாதலின் அதற்கும் மூலமான பிரணவமந்திரமே இங்குதியானிக்கப்படுவதென்றது. இப்பிரணவமந்திரம் என்றும் ஆத்மசுவரூபமேயாதலாலஃது. வெளிக்காற்றின் நன்னிலை தீநிலைகளையெதையுமவாவாது. ஆன்றோர் பறை பசியந்தி மத்தியமை வைகரி என்ற நால்வகைவாக்குகளையும் சூக்குமதமம் சூக்குமதரம் சூக்குமம் தூலமென பிரணவாவர்த்தைகளென்றே முதுநூல்கள் கூறுகின்றன. இந்நான்கு வாக்குகளோடு வைகரி யொழிந்த மற்றைய மூன்றும் கெர்ப்பகாலத்தில் வெளியாவனவாம் அவற்றுள் மத்திமை என்றவாக்கு யாம்வழங்குஞ்சொற்களிற் காரணாவத்தையான மூலநாதமாயஸ்போடத்தின் இருப்பிடமாதலின் அங்கு சாக்கிரப் பிரபஞ்சத்தின் காணும் பொருள்கட்கெல்லாம் சுவப்னத்திலமைவதுபோல் ஓர்பிரதிபிம்பமமைந்திருக்கின்றது ஆகவே சூக்குமப் பிரணவத்தை முன்னிட்டுண்டயப்பவத்திலனுபவித்த எல்லாப்பொருள்களையும் அங்கனுபவித்தல் உசிதமே ஷண்முகிமுத்திரையால் பிரணவநாதம் ஒன்றே புலன்களின் துணையின்றி கவறப்படுகின்றது. அங்ஙனமே ஆன்றோர்குறித்தனர் ஸமாதிஸ்தஸ்ய ப்ரஹ்மணோ ஹ்ருதாகாஶாத் நாதோ ப்ரஜாயதே | ஹ்ருதாகாஶாத் ஸமுத்பன்ன: | இதி, ததா. ததோ ஹ்ருத்யோங்காரஸ்ஸ்வராத்மக: இதி ததா ஶப்தப்ரஹ்மாத்ஸம்பவ: ப்ராஹ்மணோத்பவ: ஸர்வம் | ஶ்ருணோதி யஜ்ஞம் ஸ்போடம் ஸ்ரோத்ரேண வரணீய: இதிவ. பிரும்மதேவன் சமாதியில் இருந்தகாலத்து அவனது இதயத்தினின்று ஓர் நாதமுண்டாயது ஓ அந்தண கேட்பாயாக. என்றும் அதனிடத்தே முற்பகுதியுள்ள ஓங்காரமுண்டாயதென்றும், அவ்வியக்ததத்துவரூபமான சுத்தநாதம் அப்பிந்துவின் கண்ணே தோன்றியது. என்றும் தூங்கும்பொழுதுசெவியும் இந்தஸ்போடமென்ற நாதத்தைக் கேட்பானென்றும் பிறகும் சிலபலமந்திரநூல்களில் காண்க. அன்றே ஏகாக்ஷரத்தை யறிந்து என்றதால் அன்று அவ்வோரெழுத்தன்றி

வேறொன்று தோன்றுவதற்கேதுவில்லையெனவுள்ளபடி நின்றது என்றும். அஃதங்ஙனமாகுமென்பதைக் குறிக்கின்றார். எட்டுப்பிரகிருதி என்பதாகியால். — பூமிராபோऽநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச ‖ அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ‖ நிலம், நீர், தீ, வளி, வெளி, மனம், புத்தி அகங்காரமென எண்வகைப்பட்டது. எனதுப்பிரகிருதி என்று ஆசிரியர் கண்ணன் திருவாய்மலர்ந்தருளிய படி எண்வகைப்பிரகிருதிகளைக் கூட்டுக. பதினாறுவிகாரங்கள். பதினாறு கலைகள் பிராணன் சிரத்தை ஆகாயம், வாயு, தேயு, நீர் நிலம் புலன்கள், மனம் அன்னம் வீரியம் தவம் மந்திரம் கன்மம் லோகங்கள் நாமங்கள் இவைகளாம். சிரத்தையென்பது ஆஸ்திக புத்தி. அதாவது ஆன்மசுவரூபஞானம், ஆகாயமென்பது இதயாகாசம் வாயு தேயு நீர் நிலமென்பன பரிசம் ரூபம் ரஸம் கெந்தம் இவைகளாம். புலன்கள் கர்மேந்திரியம் ஞானேந்திரியமென்ற இருவகைப்பட்டபத்துமாம். மனமென்பது. சங்கற்பமாத்திரம் அன்னம் = அன்னமயகோசம். வீரியம் = வியாபித்த ரஸதாதுதவம் = சரீரத்தில் தங்கிலக்கேதுவானகாயாக்னி முதலியன; மந்திரம் = தியானம் கன்மம் தொழில் = கிரியை முயற்சி லோகங்கள் (வாசனைகள்) (சம்ஸ்காரமயமானபிரபஞ்சம்) நாமங்கள். அநுகதத்திலுள்ள சுத்தநாதம்; பிரணவமஃதேயாம் மேற்கண்ட எண்வகைபிரகிருதிகளும் பதினாறு விகாரங்களும் ஒன்பதாமாதத்திற் சரீரத்தின் கண் பரிபூர்த்தியடையும் ஆதலால் அன்றே இவனுக்குஞானம் தோன்றுமாமென்க. அல்லது எட்டுப்பிரகிருதிகளென்பதற்கு நாதோற்பத்திஸ்தானமான எட்டுஸ்தானங்களைப் பொருளாககொள்ளினுங்கொள்ளலாம் அவையாவன மார்பு கண்டம்சிரம் தவடைகள் நாவினடி, மேல்வாய் பற்கள். உதடுகள் இவை. இவற்றுள் சிரமென்றது மண்டையோட்டின் உட்புறம். மேல்வாய் என்பது வாயின் மேற்புரம். அதுவே; ங முதலிய எழுத்துகளுக்கிடமாம் பதினாறு விகாரங்களென்பன ஙவ முதலிய எழுத்துகளின் வேற்றுமையும் இது சாத்தனொலி கொத்தனொலி என்பதாதி வேற்றுமையும் உண்டாவதற்கேதுவான அகமுயற்சிகள் வெளிமுயற்சிகளெனப்படும் பிரயத்தினங்களாம் அவற்றுள் அகமுயற்சிகள் ஸ்பிருஷ்டம (தொட்டது)

ஷத்ஸ்ப்ருஷ்டம் (சிறிது தொட்டது) ஈஷத்விவ்ருதம் (சிறிது விரிந்தது) விவ்ருதம் (விரிந்தது) ஸம்வ்ருதம் (குவிந்தது.) என ஐவகையாமென ஆசிரியர்பதஞ்சலியார் கூறினர். புறமுயற்சிகளென்பன பதினொருவகையாம் அவையாவன (விவாரம்ஸம்வாரம், நாதம் சுவாசம், கோஷம் அகோஷம் அல்பப்பிராணம் மஹாப்பிராணம் உதாத்தம் அனுதாத்தம் சுவரிதமென்பன வாம் ஆகபதினொரு விகாரங்களென்க. அல்லது தாரசாரஉபநிடதங்கூறியவாறு பிரணவத்தின் எண்வகைப்பிரிவுகள் எட்டுப்பிரகிருதிகளெனவும் யோகசாஸ்திரங்களில் குறிக்கப்பட்ட பதினாறுவகைப்பிரிவுகள் பதினாறுவிகாரங்களெனவும் பல்வகையினுஞ்சேர்க்கலாம். இவைகளெல்லாம் எச்சரீரத்தின் கண் எஞ்ஞான்று பரிபூர்த்திபெறும் அன்றேநல்லறிவுண்டாமென்பது இம்மந்திரத்தின் முடிந்த கருத்து. என்பது.

அவதாரணிகை

இந்தியானத்தின்முறையைக்குறிக்கின்றார்

பூர்வஜாதிம் ஸ்மரதி
க்ருதாக்ருதம் கர்ம விந்ததி
ஶுபாஶுபம் கர்ம விந்ததி என்று

(இ—ள்) பூர்வஜாதியைநினைப்பான், புண்ணிய பாபங்களானகன்மங்கள் தோன்றும். சுபமும் அசுபமுமான கர்மத்தைப்பெறுவான். (எ—று)

(வி—ரை) ஆதியில்இச்சரீரத்தின் முன் சரீரத்தைப்பற்றிய சாதிதோன்ற அச்சாதிக்கேதுவான புண்ணியபாபங்கள்தோன்ற அவற்றிற்கேதுவானநற்செயல்தீச்செயல்கள் தோன்றுமாமென்பது இங்கமைக்கப்பட்டது. ஆகவே சரீரியின் நற்செயல் தீச்செயல்களால் புண்ணியபாவங்கள் ஆன்மாவிடத்தமைந்துபல்வகைத்தோற்றங்கட்கவனையாளாக்குமென்பதமைந்தது. எ—று

அவதாரணிகை.

மீண்டுமந்தியானத்தை [illegible]விரித்தோதுகின்றார்.

நாநாயோநி ஸஹஸ்ராணி
த்ருஷ்ட்வா சைவ ததோ மயா
ஆஹாரா விவிதா புக்தா:
பீதாஶ்ச விவிதா: ஸ்தநா:
௭

(இ—ள்) பல்லாயிரம் யோனிகளையடைந்து அவற்றினின்றும் பிறந்து பல ஆகாரங்களைத்தின்றேனும் பலமுலைகளைக்குடித்தோம்-

(வி—ரை) அவ்வச்சரீரங்களேற்ற ஆகாரங்களையும் அவ்வச்சரீரங்களுக்கு அமைந்தபடி உள்முலை வெளிமுலை என்றபலவகை முலைகளையும் ஊட்டிப்பினையப்பது ஜங்கம ஜாதிகளுக்கு இயல்பாதலால் என்க. ஒருதலை இருதலை நாற்றலை யெனபல்வகை முலைகள் பலசாதிகளில் அமைதலால் அவைபலவகைப்பட்டன.

இதுவுமது

ஜந்ம பூமிர் மஹீ ஸர்வா:
ஸ்மஶாநந்யபி ஸர்வஶ:
அநேகாநி ஸ்ம்ருதேஷு
யோநிபேதேஷு லாலவம் என்பது

(இ-ள்) எல்லாப்பூமிகளும் எனக்கு ஜன்மபூமியே எல்லாச்சுடலைகளும் முன்னமே யெனக்குச்சுடுகாடு என்பத்திநான்கு லக்ஷயோனி பேதங்களில் பிறந்தேன்- எ—து

(வி—ரை.) எல்லாச்செந்துக்களினும்பிறந்தவனுக்குபிறப்பிடமிறப்பிடமெல்லாமேயாதலால் அங்ஙனம்கூறினரென்க. எ—து

இதுவுமது.

ஜாதஶ்சைவ ம்ருதஶ்சைவ
ஸம்ஸாரே ஸ்ம்ருதிவாந் நாஹம்

𑌜𑌾𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑍃𑌤𑌶𑍍𑌚𑍈𑌵
𑌜𑌨𑍍𑌮 𑌚𑍈𑌵 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃

(இ—ள்) நான் பிறந்தேன் நான் இறந்தேன் நான் அடிக்கடி ஸம்சாரியானேன் பிறப்பும் இறப்பும் மீண்டு பிறப்பும் மீண்டும் பிறப்புமாம். எ—து

(வி—ரை) ஜனனமரண ரூபமான ஸம்சாரம் அறுதியே தொடர்ந்து வருவதைக்குறித்ததாமிது.

அவதரணிகை

இனிகெர்ப்பதுக்கத்தைக்குறிக்கின்றார்.

𑌗𑌰𑍍𑌭𑌵𑌾𑌸𑍇 𑌮𑌹𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌂
𑌕𑍌𑌮𑌾𑌰𑍇 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌜𑌨𑍍𑌮𑌸𑍁
𑌬𑌾𑌲𑍍𑌯𑍇 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌤𑌥𑌾 𑌶𑍋𑌕𑌃
𑌪𑌾𑌰𑌵𑌶𑍍𑌯𑌂 𑌚 𑌮𑍂𑌢𑌤𑌾 (எ—து)

(இ=ள்) கர்ப்பவாஸத்தில் துக்கம் பிறப்பதிலும் துக்கம் இளமையில் துக்கம் அழுகை பரவசத்தன்மை மூடத்தன்மை இவைபல. எ—து

(வி—ரை.) கெர்ப்பவாஸத்தில் மலப்பைக்கடுத்து பக்கத்தென்புகளும் மூத்திரமும் நிறைந்த விடத்துக்குடியிருந்தல்பெருந்துயரம் வாயுவால் பிறக்குங்கால் புரட்டப்பட்டு தலை கீழ் தோன்று மீளாத்துயரம் பிறந்தபிறகு பசியும் மற்றுமுள்ள உணர்ச்சிகளும் உள்ளே வருத்த அவைகளை வெளிபிட ஆற்றலற்று அழுகை யொன்றைக்கொண்டேதம் முணர்ச்சிகளைப்புலப்படுத்தி பல்வழிகளும் பரவசப்பட்டு பகுத்தறிவின்மையால் படுந்துயரம் அளவிலடங்காது எ—து

அவதரணிகை

இனி யௌவனத்தில் நேர்ந்த துயரத்தைக்குறிக்கின்றார்.

ஹிதாகரணசோவைஹ்
அஹிதாவரணம் தயா
யௌவநே விஷயாஸக்தி:
தாபத்ரய தீபீதி: (எ-து)

(இ—ள்) இதத்தைச்செய்வதில்லை சோம்பல் மிகுதி அஹிதத்தைச்செய்வதோ அதிகம் யௌவனத்தில் விஷயத்தில் அதிகாசக்தி தாபத்திரயத்தால் ஹிம்சிக்கப்படுவான் எ-து

(வி—ரை) யௌவனம்மதகாலமாதலால் சிற்றின்பமிகுதிபற்றி தனக்குள்ள இதத்தையொழித்து, அஹிதத்தைக்கையாடி பல்வகை விபரீததாபங்களுக்கிடமாவானென்பது முடிந்த கருத்து. எ—து


அவதரணிகை

முதுமைத்துயரங்களைக்கூறுகின்றார்.

விசாரோ ராஜஸ்வாஸ்தே
ரணே வஹஸ்யம்
ஆயாஸா விரோதே
காமே காயாஷிஸங்கடே (எ து)

(இ—ள்) சிந்தையும் ரோகமும் முதுமையில் மரணமும் மகாபயமாம். ஆசையாலேயும் அபிமானத்தாலேயும் காமம் கோபம் முதலிய சங்கடங்கள் சேர்ந்தால் (அதினும் துயரமதிகமாம்.) எ—து

(வி—ரை) சிந்தையும் ரோகமும் மரணமும்எல்லாவத்தைகளினுமுளவேனும் அவசியமாய் அது மரணத்தில் உண்டாயே தீருமென்பது இதன்கருத்தாம். ஆசையாலும் அபிமானத்தாலும் அமையும் காமம் குரோதம் முதலிய சங்கடங்களில் எவ்விதத்துயரமும் பருக்கும என்பதும் பிற்பகுதியின் பொருள்.



அவதாரணிகை

முடிவுரை கூறுகின்றார்.

ஸர்வம் பரவஶம் து:கமேவம்
அஸ்வதந்த்ரம் து:கமிதி க:
து:கபீஜமிதம் ஜந்ம
து:கரூபம் ச து:ஸ்ஸஹம் (எ-து)

(இ—ள்.) எதுவும் அதிகமானால் பராதுக்கமே. சுதந்திரமில்லாமை பெரியதுக்கம் துக்கத்திற்குக்காரணம் இந்த ஜன்மம் துக்கரூபமாயுள்ளது இதைசகிப்பது மிகக்கடினம்

(வி—ரை.) புண்ணியங்களும் மலிந்து சுவர்க்காதிபோகங்களைக்கொடுக்குங்கால் அதனிடத்தும் விபரீத அசுரபீடாதிகள் சம்பவிப்பதால் அதுவும் துக்கமாகவே சொல்லப்பட்டது. பிரமபதவியைப்பெற்றாலும் சுதந்திரமின்மைக்கு சுகமென்ற பெயரே கூடாது. ஆயின் பிறப்பென்றதே துயரத்திற்கேகாரணமாம் இத் துக்கரூபமான ஜன்மத்தை அறிவுடையோன் பொறுப்பது அந்நியாயமே என்பதுமந்திரத்தின் முடிந்தகருத்து.

அவதாரணிகை

மேற்கண்ட பல்வகைத்துயரங்கட்கு அருமருந்தான நல்வழிகளைநாடாது விட்டதைப்பற்றிச் சிந்திக்கும் முறையே மேலேகாட்டுகின்றார்.

நிவ்ருத்திதர்மோ நாவாப்த:
ந யோகஜ்ஞாநஸாதநம்।
அஹோ து:கார்ணவே மக்ந:
ந பஶ்யாமி நிவர்த்திகாம்॥ எ—து

(இ—ள்) நிவிர்த்தி தருமத்தை எதுஞ்செய்யவில்லை யோகஞானசாதனங்களைப்பெறவில்லை. இந்ததுக்கசாகரத்தில் ஆழ்ந்தேன் அஹோ ஒருவிதநிவிர்த்தியையும்காணேன்.

(வி—ரை) நிவிருத்தித்தருமம் = ஜனனமரணரூபசம்ஸாரத்தை ஒழிக்குந்தருமம்; யோகஞான சாதனம் = யோகமென்றஞானக்கருவி; துக்கசாகரம் = ஜன்மதுக்கம் இனி அதனால் வரும் ஜரைமரணம் என்ற துக்கங்களே சாகரமாம் மற்றதுவெளி

அவதரணிகை

அஞ்ஞானநிந்தையின் சுவரூபத்தைக்காட்டுகின்றார்.

யிமஜ்ஞாநம் யிஜ்ஞாநீ
யிக்ஷாமோக ராயவஸம்கடம்
ஸம்ஸாரஶ்ரும்வயாம் யிமுக்
ஶுவாயடிர ஜ்ஞாநமோரூயாம் (என்று.

(இ—ள்) அஞ்ஞானத்தை சுடு. சுடு. காமக்குரோதசங்கடத்தை அப்படிசெய். சம்சாரவிலங்கை சுடு. ஆசாரியனிடத்து ஞானத்தையடைவேன்- எ—று

(வி=ரை) அஞ்ஞானம் = ஜன்மஹேதுவான ஆத்மசுவரூப அறிவின்மை. காமக்குரோதங்களால்நேரிடும் சங்கடமும் பாவமாம் பந்தத்திற்கேதுவாதலால்சம்சாரத்தை விலங்கு என்றது. ஆசாரியனிடத்தென்பதாதி முற்பவங்களில் தாம் ஏற்றதும் இப்பவத்திற்கேதுவானதுமான தாமேகண்ட புதுவழிகளைவிட்டு இனியேனும் ஜன்மமரணங்கள் சம்பவிக்காதவழியில் ஆசாரியனிடத்து ஞானோபதேசம் பெறவேண்டுமென்பதைக்குறிக்கின்றது. ஆசாரியனில்லாத வேதாந்த வித்தை அணுவிலும் உபயோகப்படாதென்பது கருத்து.

அவதரணிகை

சதாசாரியகிருபையால் கிடைக்கவேண்டிய ஞானத்தைக் குறிக்கின்றார்.

யதியொந்யாம் ப்ரமுச்யேஹம்
ஸாங்க்யம் யொகம் ஸமாஶ்ரயெ ||

அஶுபக்ஷயகர்த்தாரம்

ப²லமுக்திப்ரதா³யகம் ‖ எ—று

(இ—ள்) யோனியைவிட்டு வருவேனாயின் ஸாங்கிய த்தையும் யோகத்தையும் ஆசிரயிப்பேன். அசுபக்ஷயத்தைச் செய்பவனையும் பலமுக்தியைக்கொடுக்கும் ஈசனையும் வழி படுவேன்.) எ—று

(வி—ரை.) யோனியைவிட்டு வெளிவருதல் பிறப்பது. சாங்கியம்=என்றாலின் கண்ணும் ஆன்மா நன்குவிசாரமுகத்தால் தெரியப்படும் அஃதே. ஆயின்வேதாந்தமே நிரீசுவரமன்று. அ துஇச்சாத்திரத்துக்கு முற்றும் முரணாதலால், யோகம்=சித்தவி ருத்தியைத்தடுத்தற்கு ஏதுவான அப்பியாசம்; அதுஞான சாத னம். மேற்கண்டசாங்கிய யோகங்களின் படித்ததின் டயன் யா தென விரித்தோதுகின்றார் மேற்பகுதியால்.— அசுபம்=அஞ்ஞ அவித்தை, அதன்க்ஷயம்=மீட்சியற்றநாசம். அதற்கேதுவாய்உள் ளவன் பரமேசுவரன். பலமுக்தி=எல்லாவித்தைகளுக்கும் பர மபலமாயுள்ள சம்சாரபந்தநிவிர்த்தி. அதனைக்கொடுப்பவனும் அ வனும். அவன்வழிபாடேசாங்கியயோகங்களில் ஏற்படும் பரமப் ப்ரயோஜனமாம் அவித்யாநாசத்தைக கொடுப்பவனே பலமுத் தியைக்கொடுப்பவனென்றதால் அவ்வவித்யாநாசமேபல முத்தி யென்பது சொல்லாதமைந்ததாம். அல்லததற்கே இஃதோர் சிற்றுரையாம். எ—று

அவதரணிகை

இனி சதாசாரியன் திருவடிமலர்தொழுது அவன்கருணை யேற்று பல்வகைப்பண்டைய நூல்களைக்கற்றாலும் பரமேசுரன் திரு வருளன்றி எஞ்ஞான்றும் இத்துணைப்பவங்களாலும் வீடு கூடா தென்பதை விரித்துக்காட்டுகின்றார்மூன்றுமந்திரங்களால். அவ ற்றுள்முதல்மந்திரமிது.

யோ ப்³ரஹ்மாணம் வித³தா⁴தி

தம் ஹ தே³வமாத்மபு³த்³தி⁴ப்ரகாஶம் |

அஶுபக்ஷயகர்த்தாரம்

ப²லமுக்திப்ரதா³யிநம் || என்று

(இ—ள்) யோனியைவிட்டு வெளிப்படுவேனாயின் அசுபநாசம் செய்வானாயினும் புருஷார்த்தத்தைக் கொடுப்பானாயினும் பிரசித்தனான மகேசுவரனை சரண மடைவேன். எ—று

(வி—ரை) மகேசுவரனது திருவருளாற்றான் எவருக்கும் பலமொழிந்து பரமானந்தசாயுஜ்யம் கைகூடுமென்பதுஇதன் முழுக்கருத்தாம். அசுபநாசம்என்று முதலடியில் குறிக்கப்பட்டதே மற்றடியில் புருஷார்த்தமெனப் பட்டமையால் அஃதொழிந்த மற்றது புருஷார்த்தமென்பதேற்பட்டது.

அவதரணிகை

வழிபடத்தக்க கண்ணுதற்கடவுளை இரண்டாம் மந்திரத்தால் விசேடிக்கின்றார்.

யதி³யோந்யா꞉ ப்ரமுச்யேஹம்

ப்ரபத்³யே ஜக³தீ³ஶ்வரம் |

ஸர்வஶக்திம் விதா⁴தாரம்

ஸர்வகாரணகாரணம் || எ—று

(இ—ள்) யோனியைவிட்டு வெளிவருவேனாயின் எல்லாக்காரணங்களுக்கும் காரணனாய் சித்ரூபனாய் சர்வசக்தியாய் உள்ள ஜகதீசுவரனை சரணமடைவேன்.

(வி—ரை) ஜகதீசுவரனை = பிறப்பிறப்புகளுக்கு வசப்படும்பிரமாதிசேதனவர்க்கங்களுக்கு நாதனை ஈசனை ([illegible]) எவற்றிற்கும் ஈசுவரன் சம்புவாகாயமத்தியிலுள்ளான் என்று, வேதம் கூறுதலால். சர்வசக்தியுள்ளவன் = பராஸ்ய ஶக்திர்விவிதை⁴வ ஶ்ரூயதே ஸ்வாபா⁴விகீ ஜ்ஞாநப³லக்ரி

யாவ ஸ்ரையான இவனது சக்திபல்வகையாய்க்கேட்கப்படும். இயல்பிலமைந்தது ஞானம் பலம் கிரியையுமெனவியாம் என்பதாதி வேதாந்தங்கள் கூறியவாறு பல்வகைச்சக்திகளுக்கிடமாயுள்ளவன் அவன் சித்ரூபனென்றது கேவலம்சச்சிதாநந்த ரூபனாதலால். எல்லாக்காரணங்கட்கும் = காரணங்களென்றுவேதாந்தங்களிற் குறிக்கப்படும் பிரமாதிகளுக்கும்; காரணன் = ஏதுவாயுள்ளவன் கர்த்தா இவனைக் காரணகாரணமென்று குறித்தமையால் ஜனன மரணவசப்படுதலும் ஏனையகாரணங்கட்கமையாத பிறப்பிலித்தன்மையேஎம்பிரானிடத்துப்பெரும்பெருமையெனக்குறிக்கப்பட்டது. ஸ காரணம் கரணாதிபாதிப: = அவன் காரணன் காரணாதிபதிகளுக்கும் அதிபதி. ஜந்மநிரோதம் ப்ரவதந்தி யஸ்ய ப்ரஹ்மவாதினோ ஹி ப்ரவதந்தி நித்யம் பிறப்பின்மையை எவருக்குக்குறிப்பார் அச்சமுற்ற ஒருவன் நீயேபிறப்பிலியெனநம்பிவழிபடுவான் என்பதாதி பலவேதாந்தங்கள் பரமேசுவரனை பிறப்பிலியென்றே குறித்தலால். எ—று

அவதாரணிகை

மீண்டும் அவன் பெருமையைக்குறிக்கின்றார் மூன்றும் மந்திரத்தால்.

யத்யோநேர் நிஷ்க்ராம ப்ரஸவேத்யஹம்
ப்ரபத்யே பரமேச்வரம் ।
பர்கம் பசுபதிம் ருத்ரம்
மஹாதேவம் ஜகத்குரும் ॥ என்று

(இ—ள்) யோனியைவிட்டு வெளிவருவேனால் பரமேசுவரனும் பார்க்கனும் பசுபதியும் ருத்திரனும் ஜகத்குருவுமான மஹாதேவனை சரணமடைவேன். எ—று

(வி—ரை) பரமேசுவரன் = ஈசுவரர்களெனப்படும் ஏனையக் கடவுளர்க்கும் ஈசுவன். தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் தம் தேவதாநாம் பரமம் ச தைவதம் ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்ய

தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தைவதாநாம் — ஈசுவரர்களுக்கெல்லாம் மேலான மஹேசுவரன் தேவதைகளுக்கெல்லாம் மேலானதேவன் பலபதிகளை சிருஷ்டித்து ஸர்வாதிபதியாய் விளங்குவான் மஹாத்மா என்பதாதி பலசுருதிகள் நிரூபித்தலால். பிரமாதிதேவதேவனென்பது அதன்கருத்தாம். பர்க்கனும் ஸ்ரீகாயித்திரிமஹாமந்திரத்தில் ஸர்வசேதனசேதனப்பிரேரகனாய் பர்க்கன் என்றசொல்லாற் குறிக்கப்பட்டவனும் ஸு ஹிரண்யகம் ஸஹஸ்ரம் ஜநாநாம் எங்கும் பிரஸித்தனாய்ஜனங்களுக்குபர்க்கச்சொல்லாலறியப்படுபவனான பரமேசுவரனை தோத்திரிக்கவேண்டுமென அதர்வணவேதம் நிரூபித்தமையாலென்க. பசுபதியும் = பசுக்களுக்கு பாசத்தைவிளக்கும் ஆற்றலுடைய பரமபதியும்; ஆதலாலே ருத்திரனுருத்ரனும் எனப்படும் ஸம்சார மூலகாரணமான அவித்தையை ஒழிப்பவனாதலால் அவன்ருத்திரனெனப்பட்டான். இவ்வுருத்திரச்சொல்லுக்கு அமைந்த பல்வகைப்பொருள்களையும் எமது அவிமுக்த ஜாபாலப்பேருரையிற்காண்க. மஹாதேவனை = மஹான் என்ற சொல்லுக்குப்பொருளாயுள்ள தேவனை; அல்லது, ஆத்மசுவரூபஞானந்தங்களால் சிறப்பியடைந்தவனை. ஸர்வாந் பாவாந் பரித்யஜ்ய ஆத்மஜ்ஞாநயோகைஶ்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாதுச்யதே மஹாதேவ:. இனிஎதனால்மஹாதேவனெனப்படுவான்; எவன்எல்லாவஸ்துக்களையும் ஒழித்துதன்சுவரூபமான அளவில்லாத ஞானஐசுவரியங்களில் நிலைபெற்றிருப்பான்; அதனால் மஹாதேவனெனப்படுவான்; என்று அதர்வசிரம்கூறியமையாலென்க. ஜகத்குரு பரமபூர்வாசாரியனும். யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை. எவனாதியில் பிரமதேவனை சிருஷ்டித்தான்; எவன் அவனுக்கு வேதங்களையும் உபதேசித்தான்; என்றுவேதங்களும் அங்ஙனமே. ஸ ஏஷ பூர்வேஷாமபி குரு: காலேநாநவச்சேதாத் = அவன் முன்னோருக்கும் குரு காலவரைகடந்துநிற்றலால் என்று யோகநூலும் ஈசனைபரமாசாரியனென்று நிரூபித்தலாலென்க.

அவதரணிகை

மேற்கண்டபடி நிஷ்காமமாய் மோக்ஷத்திற்காக விருபாக்ஷனை வழிபடுவதற்கேற்றபடி பூர்ணாதிகாரம் கிடைக்காதொழிந்தால் அன்று, அப்பரமேசுவரன் திருவருள்கிட்டவேண்டி, மிக்கமேதார் தவம்புரிந்து [illegible]. எல்லாச்சக்திகளுமுடையவனிவன், பிரும்மத்திற்கடுத்தவன், என்று புராணங்கள் கூறியபடி பரமேசுவரனது திருமேனியிலொன்றாய் அவனுக்கடுத்தபடி நிற்கும் விண்டுவை வழிபடுவேனென்கின்றார்.

[illegible]
[illegible] ॥ என்று

(இ—ள்) யோனிமத்தியத்தை விட்டிருந்தால் அற்புதமான தவத்தைச் செய்வேன், எ—து.

(வி—ரை.) கிருச்சிரம், சாந்திராயணம், முதலியவிரிந்ததவமின்றி என்றும் ஈசனருட்கிட்டாதாம்என்பது இதன் கருத்து.

அவதரணிகை.

மேலே ஸ்ரீமந்நாராயணன் வழிபாட்டை இரண்டுமந்திரங்களாற் சங்கற்பிக்கின்றார்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ எ—து

(இ—ள்.) கர்ப்பவாஸத்தை விடுவேனேயானால் அமிருதத்தைக் கொடுப்பவனும் ஆனந்தரூபனும் அநாமயனும் விஷ்ணுவுமான நாராயணனை ஹிருதயத்தில்பஜிப்பேன். எ—து.

(வி—ரை) அமிருதத்தைக் கொடுப்பவன்=மோக்ஷத்தைக் கொடுப்பவன்; அல்லது சிவனைக்கொடுப்பவன்; சிவமார்க்கத்தில் ஸ்ரீமந் நாராயணனை சத்குருவாதலாமெனக். விஷ்ணுரிதி தாவ த்ப்ரஹ்மவித்ஸு வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் விஷ்ணோ தேவத்வம் பரமேஷ்டினே. விஷ்ணுவல்லவோ பரமனையறிந்தவன். அறிவேன்யானிப்புருடனைமகானை விண்டுவேபரமன் தேவத்தன்மையை அறிவாய் நீயே என்பதாதி பல வேதவாக்கியங்கள் ஸ்ரீமந்நாராயணனை பிரும்மநிஷ்டனெனக்குறித்தலால். ஆனந்தரூபன்=சச்சிதாநந்தரூபன் அனமயன்=ஆமயமெனப்படும் அவித்தையை தம்மிடமணுகப்பெறாத நித்திய சுத்தமுக்தசுபாவன் விஷ்ணு=காண்பொருளனைத்தும் உள்ளும் புறத்தும்வியாபித்துநிற்பவன். அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித: உள்ளும் புறம்பும் அதனையெல்லாம் வியாபித்து நின்றான் நாராயணன். நாராயணனை என்றது விசேஷ்யச்சொல்லாம். அது பூமகள் காதலவன் புண்ணியத்திருநாமமாம்.

அவதாரிகை

சித்தவிருத்தியை மற்றெங்கும் விடாது ஒருநிலைப்படுத்தி வழிபடவேதே திருமால் திருவுளமொத்த வழிபாடெனக் குறிக்கின்றார்.

> ஜாதஸ்ச க்ஷணதிவஸோத்ஸவே
> ஜீவேத்யது ப்ரபத்யே யநாக:|
> வாஸுதேவம் ப்ரதோஷயாமி
> ஸம்யக்ஸந்தர்ப்யே: ||

(இ—ள்.) தாய்வயிற்றில் கட்டுப்பட்டேன். இதை விட்டு இப்பொழுது வெளிவருவேனாகில், பகவானாகிய வாசுதேவனை, வேறிடத்திற் புத்தியைச் செலுத்தாது, சந்தோஷிக்கச்செய்வேன். ஏ—து

(வி—ரை.) பகவான் = ஷாட்குண்ணிய பரிபூரணன்; வாசுதேவன், எங்கும் நிறைந்த ஏகரஸமூர்த்தி இவ்விதப்பெருமையுள்ள ஈசனை உபாசிப்பதற்கு தற்காலம் நல்லறிவிருந்தபோதிலும் அவனிடத்து நவவிதபக்திகளைச் செலுத்த இடையூறாய் கர்ப்பவாசம் நேர்ந்திருக்கின்றதென்பதைக் குறிப்பாராய் பந்தமுள்ளவரை ஆத்மசுவரூபஞானம்நிலைபெறாதென்பதைக்குறித்தார். எ-று

அவதரணிகை

மேற்கண்ட அத்தியத்புத மோக்ஷமார்க்க ஹரிபஜனசம்பிரதாயத்தை எற்கும் பாக்கியமும் இரும்பிறவியில்லாவிடில் பூர்வஜன்மத்தைப்போல் முற்றும் நாஸ்திகனாய் ஒழிந்து, பெண்பிள்ளைகள் முதலிய பிறருக்கே பாடுபட்டுக்காலங்கழிக்காது, ஆஸ்திகனாயாவது காலத்தைக்கழிக்க, எத்தனிக்கவேண்டுமெனச் சங்கற்பிக்கின்றார் இரண்டுமந்திரங்களால்.

மயா பரிஜநஸ்யார்தே
க்ருதம் கர்ம ஸுதாருணம்।
ஏகாகீ தேந தஹ்யாமி
கதாஸ்தே ஃபலபோகிந:॥ என்றும்

நாஸ்திக்யேந பயம் த்யக்த்வா
பாபாந்யகார்ஷம் புரா।
ஸஞ்ஜாத து:கஸந்தப்தோ
பவிஷ்யாம்யாஸ்திகாஸ்திக:॥ என்றும்

(இ—ள்) முன்னே இதரஜனங்களுக்காக அனேக சுபாசுப கன்மங்கள் செய்யப்பட்டன. நான் ஒருவன் அதனால் வருந்துகிறேன். அதன் பலத்தையனுபவித்தவர்கள் எங்கோ போனார்கள். நாஸ்திகத்தால் பயத்தைவிட்டு பாபங்களை முன்னே செய்தேன். அதன் பலத்தை இப்பொழுது அனுபவிக்கின்றேன். இனி ஆஸ்திகனாவேன். எ—று

(வி—ரை) முன்னே = பூர்வ ஜன்மங்களில்; இதர ஜனங்கட்காக = பெண்பிள்ளைகள் முதலிய ஜனங்கட்காக; சுபாசுபகன்மங்கள் = புண்ணிய பாபங்கள்; வருந்துகிறேன் = உத்தமப்பிராமணனாதி ஜனனம் புண்ணியபலமாயினும் அதனிடத்தும் ஜன்மதுக்கம் இயல்பாயமையுமாதலால். அதன் பலத்தையனுபவித்தவர்கள் = ஆகாரம் வஸ்திரம் ஆபரணம் முதலிய சுகங்களை ஏற்றவர்; எங்கோ = யாம் அறியக்கூடாத கர்மபலத்துக்கேற்ற கெதியில் போனார்கள் = அப்பயனையனுபவிக்கின்றார்கள்; நாஸ்திகத்தால் = தெய்வமில்லை, பரலோகமில்லை, என்பதாகிய நினைவால்; பயத்தை = பாபத்தினின்று உண்டாம்பயத்தை; விட்டு = சிந்திக்காதொழித்து; பாபங்களை = மிகுதியாய் பாபங்களை: சிறிது புண்ணியமில்லாவிடின் மிசிரகர்மபல ரூபமான இப்பிறவி வாய்க்காமையால். இனி = இக்கர்ப்பத்தைவிட்டு வெளிவந்தால்; ஆஸ்திகனாவேன் = ஈசன் உண்டு பரலோகமுண்டென்ற விசுவாசத்துடன் அவன் திருவடியிற்பற்றுள்ளவனாவேன்.

அவதாரணிகை

இவ்வகைகர்ப்பத்தில் நடக்கும் துக்கானுபவங்களை மீண்டுங்குறித்து. மேல் அச்சீவனுக்குச் சம்பவிக்குங்கெதியைக்காட்டுகின்றார் மூன்றுமந்திரங்களால்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௭—௮

(இ—ள்) இங்ஙனம் பல்வகைப்பட்டமுபசங்கதிகளைச் சிந்திக்கும் என்றுமுள்ள சம்சாரதுக்கத்தை நினைத்து நினைத்து ஒழிவடைந்தும் அவித்தைகாமம்கர்மம்முதலியவைகளால் கர்ப்பத்திலுள்ள ஜந்து வருத்தப்படுகிறது.

அவதாரணிகை

அவ்வனந்து பிறப்பவஸ்தையைக் குறிக்கின்றார்.

ஸசைவ ஜந்து: ஸ்த்ரீயோநி
ஶதஸம்பவோ யோநித்வாரஸம்ப்ராப்தோ
முமுக்ஷுர்யததே தத்ராஶக்தோ
யந்த்ரேணாபீட்யதே மஹதா து:கேந
விப்ரக்லிஷ்யதே ப்ரஸவஸம்ப
வாதேந|| என்று

(இ—ள்) அந்த ஜந்து ஸ்திரீகளின் பலயோனிகளை யடைந்து யோனித்துவாரத்தை யடைந்தபொழுது மோக்ஷ இச்சையுடன் முயற்சிசெய்கின்றான். அங்கு அசக்தனாகிய இவன் யந்திரத்தால் பீடிக்கப்படுகிறான். மகத்தான துக்கத்தால் வருத்தப்படுகிறான். பிரஸவவாதத்தால் பிசையப்படுகிறான். எ-று

(வி—ரை) பலயோனிகளையடைந்து = அனேக ஜன்மங்களைப் பெற்று; யோனித்துவாரத்தை யடைந்தபொழுது = மீண்டும் கர்ப்பத்தை யடைந்தபொழுது; அதாவது தகப்பன் சுக்கிலத்தின்வழி தாயின்கர்ப்பம் சேர்ந்தபொழுது; மோக்ஷ இச்சையுடன் = அந்தக்கஷ்டத்தைவிட்டுத் துலைக்கவேண்டுமென்ற அவாவுடன், முயற்சிசெய்கின்றான் = மெள்ளவெளிவர உத்தேசிக்கின்றான்; அல்லது மோக்ஷஇச்சைமேலிட்டு அம்மோக்ஷத்திற்குரியசாதனங்களை ஜனித்தபிறகு தேடுவோமென்பதும் அதற்குப் பொருளாகும். அப்பொழுது, யோனித்துவாரத்தை அடைந்தபொழுதென்பதற்கு = பிறந்தபொழுது என்றபொருள்கொள்ளவேண்டும். அங்கு = கர்ப்பத்தின் கண்ணே; அசக்தனாய் = எவ்வித முயற்சியும்பயன்படப்பெறாதவனாய்; இவன் = கர்ப்பத்திலுள்ள பிராணி; யந்திரத்தால் = யோனியந்திரத்தால்; பீடிக்கப்படுவான் = அவ்வியந்திரம் ஈசன்மைப்பால் சுருங்கி ஒருங்கி ஒருகாலத்துள்ளமைந்த கர்ப்பத்தை உமிழ்ந்திடுமாதலால் அபபீடையே யந்திரபீடையெனப்ப

ட்டது. அச்சமய முண்டாம் வருத்தம் மிகப்பெரிதெனக்குறித்தற்கே மகத்தான துக்கத்தால் வருத்தப்படுகிறான் என்றது. பிரசவவாதத்தால் பிசையப்படுகிறான் = பிரசவவாதமென்பது பெண்களின் சரீரத்தில் தோன்றி கர்ப்பத்தை வெளிப்படுத்தும் ஓர்வாதம். அஃது ஓர்சமயம் இளம்பி மேலே தலையுங்கீழே குண்டிக்காயுமாயிருந்த சிசுவை தலைகீழ்ப்புறட்டி உருட்டி யோனித்துவாரத்துவழி வெருட்டிப்பிசைந்து வெளியாக்கும் அக்கர்ப்பத்தின்கண் சரீரத்தின்உபயோகத்திற்குக்கண்டெஞ்சிய உதிராதிகளும் அக்கர்ப்பத்துடன்முன்னும்பின்னுமாக உடைத்துப்பிழிந்து வெளியேற்றிவிடும். இதனையேபிரஸூதி வாதமென்பார் இதனால்சிசுவுக்குண்டாகும் வருத்தமளவிலடங்காது. ஆதலாற்றான் சிசுவவிக்கும்கர்ப்பத்தின்மலத்தால்] அவ்வாயுபிரகோபித்து ஈசனருளால் பிரசவத்தை யுண்டாக்கின்றதென்பார் வைத்தியர்.

அவதாரணிகை

பிறந்தவுடன் பழயசங்கற்பங்களெல்லாமொழிய பஹிர்முகதை தோன்றி துயரம்மிகுவதைக் காட்டுகின்றார்.

ஜாதஶ்சாத வைஷ்ணவேந
வாயுநா ஸம்ஸ்ப்ருஷ்டஸ்ததா
ததா நஸ்மரதி
ஜந்ம மரணாநி
நாவபோதக்ஷயத்ருஹ்வதி என்று

(இ—ள்) பிறந்தவுடன் வைஷ்ணவவாயுவால் தொடப்படுவான். அப்பொழுது எதையும் நினைக்கமாட்டான். வேறுமறுமையிலுள்ளதையும் வேறு இம்மையிலுள்ளதையுங்கண்கின்றவனுவதில்லை. (எ—று)

(வி—ரை) வைஷ்ணவவாயு = இது வேறுவாயு; இது பிறந்தவனுக்கு ஸம்சாரகாரணமாகும். எங்ஙனமெனில் சிரட்வெளிவந்தவுடன் நாசித்துவாரத்தால் பிராணனுக உட்புகுந்து பிராணகோச

த்தின் வழிஇதயத்தைக்குவியவும் மலரவுஞ்செய்து சரீரமெல்லா ம் உதிரத்தை யோட்டிப்புலன்களைத் துலக்கி, விஷயவசப்படுத்து ம் பசிதாகம்முதலியவற்றையுண்டாக்கும். உள்ளேசென்றபொரு ள்களைபாகம் செய்விக்கும். இங்ஙனம் சரீரவியாபாரம் நிகழுங் கால் மனம் அகப்பொருள்களைக்கவராது புறப்பொருள்களைக்கவர்ந் து நிற்கும். ஆகவே மறுமை நினைவொழிவதுநியாயமேயாம். அ துவரை அபரோக்ஷமாய்த்தோன்றிய ஆன்ம சுரூபத்தையும் மற ந்து அனாத்மப்பொருள்களில் தன் வசப்பட்டேசம்சாரம்பருகுகின்ற து என்பதாயிற்று.

அவதரணிகை

பூமி சம்பந்தமுண்டானபிறகு அச்செவடையுந் தூரவத்தை யைநிரூபிக்கின்றார்.

ஸ்பர்சம் ப்ராப்ய பூமேஸ்து
உக்ரத்ருஷ்டிர்மஹாபலஃ
ஜலஸம்பர்க்காதேவாஸ்ய
த்ருஷ்டிதோஷஃ ப்ரசாம்யதி என்று

(இ—ள்) பூமியைத்தொட்டவுடன் ஓர்ந்து உக்கிரப்பா ர்வையுடையதும் பாமரமுமாகும். தண்ணீர்தொட்டபிற கே அதன் கண்தோஷம்விலகும் எ—து

(வி—ரை) பூமிஸ்பரிசமென்பது =கர்ப்பத்தைவிட்டுமுற்று ம் வெளிவருவது; பாமரமென்பது = அறிவீனம்; உக்கிரப்பார் வையுடையது= கண்ணில் திருஷ்டிதோஷமுடையது: தண்ணீர் தொட்டபிறகு= குளிர்ந்த நீரால் கண்ணை அலம்பி விரிக்கச்செய் தபிறகு. கண்தோஷம்விலகும்= கண்தோஷமொன்றே விலகும ன்றி பாமரத்துவம் எத்துணை முறை நீர் தொட்டாலும் அதில் ஒழி யாதென்பது கருத்து

அவதரணிகை

இனி பூமியின்ஸ்பரிசத்தால் அச்செந்துவுக்குண்டாம் அ ஞ்ஞானத்தை விரித்துக்காட்டுகின்றார்.

ததோ ஜாதஸ்ய
ஜந்மமரணகர்மஶுபாஶுபாநாம்
ஸ்ம்ருதிர்வாஸநாஶ்சாஸ்தமிதா:
ஸம்பவந்தி ௭—து

(இ—ள்) பிறந்தவுடன் ஜன்மம் மரணம் கன்மம் சுபாசுபங்கள் இவற்றின் தியானவிளக்கமில்லை- வாஸனைகளும் மறைந்துபோகின்றன.

(வி—ரை) பிறந்தவுடன் = பிராணசேஷ்டை தொடங்கியவுடன் = ஜன்மம் மரணம் கன்மங்கள் இவைகளைச்சென்றனவென்ற நினைவும் வருஞ் சுபாசுபங்களெனப்படும் புண்ணியபாபங்களின் நினைவும் முற்றுந்தொலைகின்றது. வாசனைகளும் = பூர்வஜன்மஸ்மரணகாரணமான புண்ணியவாசனைகளும்; மறைந்துபோகின்றன = வெளிப்படுவதில்லை.

அவதரணிகை

உபசங்கரிக்கின்றார்.

கதயோ ஜாநாதி

(இ—ள்) எப்படி இனியறிவான் ௮—து

(வி—ரை) நல்லறிவுக்கிடையூறு பலதோன்றியமையால் இனி நல்லறிவுண்டாகாதென்பது கருத்து.

அவதரணிகை

இனிசரீரத்தைத்தொடங்கி அதன் கண்ணுள்ள முத்தோஷங்களையும் அவற்றின் நன்னிலையாகிய ஆரோக்கியத்தையும் நிரூபிப்பாராய் அவற்றின் நிலைதடுமாற்றத்தால் உண்டாங்குறைகளையுங்குறிக்கின்றார்.

வாதபித்தஶ்லேஷ்மத்ரயோ தாதவ:
ஸமாநாமாரோக்யதா ஸம்பவந்தி

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று

(இ—ள்) வாதம் பித்தம் சிலேஷ்மம் என்ற மூன்று தாதுக்கள் சமானமாய் இருந்தால் ஆரோக்கியத்தைக் கொடுக்கும். விஷமமானால் ரோகத்தைக்கொடுக்கும் ரோகியாயுள்ளவன் அறியவேண்டியவைதையுமறியமாட்டான் ஆகையால் சித்தமனுரூபமாயுள்ளகாலத்து அறிவான். குறைந்தால் குறைவாயறிவான். அதிகமானால் அதிகம் விகாரப்பட்டால் அவனும் விகாரமடைந்து பயித்திக்காரனாவான். எ—று.

(வி—ரை) வாதம் பிராணரூபியாதலாலும் யோகிவாகியாதலாலும் தோஷங்களில் முதலில் கூறப்பட்டது. பித்தம்புத்தி சுவரூபமாதலால் இவ்விடத்தில் எடுத்து நிரூபிக்க நேர்ந்தது இரண்டாவதாம். சிலேஷ்மம்=கபம் அது நாசத்தைச் செய்வதாதலால் இறுதியில் வைக்கப்பட்டது. இம்மூன்றும் தாதுக்களெனப்பட்டமையால் ரஸாதிகளான ஏழுபொருள்கள் தாதுக்களென வழங்கப்படுவது போல வாதபித்தகபங்கட்கும் தாதுவழக்குமுண்டென்பதாயிற்று. இவைகள் சமானமாய் இருந்தால்=தத்தமளவுக்கு மீறுதிருந்தால், ஆரோக்கியத்தை=ரோகமின்மையைக் கொடுக்கும். விஷமமானால்=அளவிற்குறைந்தேனும் அதிகப்பட்டேனுமிருந்தால்; ரோகத்தைக்கொடுக்கும்=ரோகங்களுக்கேதுவாம். இக்கருத்தாலேயே வாக்பட்டர் அஷ்டாங்கஹிருதயத்தில் [illegible] ரோகமென்பது தோஷத்தின் அளவைமீறுதல் சமமாயிருத்தலே ஆரோகமாமென்றார் இனிரோகியாயின் குற்றம்யாதெனக்கூறுகின்றார் ரோகியாயுள்ளவன் என்பதாதியால். ரோகியாயுள்ளவன்=தன்னிலைதடுமாறியமூன்றுதோஷங்களைப்பெற்றவன் அறிய

வேண்டுவதையும்=அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய பதா ர்த்தசுவரூபங்களையும் உம்மையால்அறியக்கூடாததும் குறிக்கப்பட் டது அறியக்கூடாததையறியாமையால் வந்தகுற்றம் யாதெனில் இஃது எம்மால் என்றும் நினைக்கப்பாலதுமன்றென ஓர்பொருளி ன்கண் வெறுப்புண்டாவதற்கு அதன்இயலறிவவசியமாதலாலென் க. பித்தம் அனுரூபம்=எவ்வளவுஇருக்கவேண்டுமோ அவ்வள வே இருத்தல் அனுரூபமாம் பித்தத்தாலறிவானென்றதால் சரீர த்தினிடத்தே நிகழும் அறிவெலாம் பித்தத்தின் நிலையையனுசரித் ததென்றாயிற்று. ஆதலாற்றான் சூத்திரஸ்தானத்தில் வாக்பட்டர்

ஸந்ஹ்ஃஹாத ருவிக்ருதம் பித்தம் வக்த்ருஷ்ணத்ருஷ்டிபி ருஷ்டிஃ

விகாரமில்லாத பித்தம் பாகத்தாலேயும் உஷ்ணத்தாலேயும் தெ ரிசனத்தாலேயும் சரீரத்தை அனுக்கிரகிக்கும் என்றார். தெரிச னம் என்பது=அறிவு; குறைந்தால்குறைவாயறிவான்=பித்தங்கு றைந்தால புலன்களின் ஆற்றல் ஒருவாறு குறையுமாதலால் அறிவு குறையுமென்றது. அதிகமானால்அதிகம். அதனை முறைப்படிவளர் த்தால் அறிவும் விரிந்து வளரும்; விகாரப்பட்டால்=முறைபிரண் டு அதிகமாய்மூளை முதலிய விடங்களில்ஏறினால்; அவனும்=விகார மடைந்தபித்தமுடையசரீரியும்; விகாரமடைந்து=மதிநிலைதவறி; பயித்தியகாரனாவான்=பயித்தியம்வரையிலுள்ளவிபரீதரோகங்க ளுக்காளாவான்; ஆதலாற்றான் வைத்தியசாஸ்திரத்திலும் வித்தம்

ஹிதம் ருத்வா ஸாஃ வித்தாதம் மதிகம் நஃ பித்தமே

ஞானரூபமாதலால் பித்தத்தைப்பற்றியே மனஞ்செல்லுமென்று நிரூபிக்கப்பட்டது.

அவதரணிகை

இனி அதேபித்தம் சரீரத்தின்கண்ணே அன்னாதிகளைப்பா கஞ்செய்து சரீரத்தையுபகரிக்கும் முறையைக்கூறுகின்றார்.

தஸ்மின்வித்தஃ ஸ்ரீஃ ஸமாயமதஃ
யஃஸமாயஃஸமத்வெ ரவாயா நா
வஜ்ராஹ்வதயஸ்வீந்த நம்
ஸோமஹ்வாஸரவோஸுஃம்வ

(இ—ள்) அப்பித்தமே அக்னியாம் கர்மாசயத்தைய டைந்து தர்மாதர்ம மூலமானவாயுவினால் ஜ்வலிக்கச்செய் யப்படும் வெளியில் இந்தனங்களமைவது போல உள்ளே போக்கியமுமப்படியாம் எ—று.

(வி—ரை.) மேற்குறித்த பித்தமே அக்னி என்றதால் அக் னியென்பது சரீரத்தின் கண்ணமைந்த பித்தமன்றி வேறிலையெ ன்றும், யாம்புசிக்கும் பொருள்களைப்பாகம் செய்வித்தலால் அஃத க்னியென உபசரிக்கப்பட்டதென்றும், வெப்பமென்பது தேயுபூ தத்தின் குணமாதலால் அக்குணமுடைய பித்தம் அங்ஙனம் குறி க்கப்படுவதுசிதமென்றும் வைத்தியசாஸ்திரத்தின் கருத்து. கர் மாசயத்தையடைந்து கர்மம்=தொழில்; அதாவது, புசிக்கப்பட்ட பொருள்களைப்பாகஞ்செய்தல். அது நிகழுமிடமே கர்மாசயமாம். ஆகவே ஆமாசயத்திற்கு நெருங்கி நிற்கும் கோஷ்டாக்கினிஸ்தா னமெனக்குறிக்கப்போகிற பித்தகோசமே அதுவாம். அப்பித்தம் சரீரமெங்கும் வியாபித்து இருப்பினும் உட்கொண்ட பொருள்களைப்பாகஞ்செய்வித்தற்காக, அதேவிடத்தில் அஃது அவ்வப்பொழுது பிரகாசிக்குமாதலால் அவ்விடத்தேயதற்குறி யதென்றது. இது அக்னியானால் காற்றும் கட்டையுமின்றி அஃ துவிருத்தியடைவது கூடாமைபற்றி இங்கு அவைகளுண்டோ வெனக்குறிக்கின்றார் தர்மாதர்மமூலமானவென்றதாதியால். தர் மாதர்மங்களே ஆத்மாக்கள் தனுகரணாதிகளைப்பெறுவதற்கேது வாதலால், அவ்வச்சரீர காரணமான தர்மாதர்மங்கள் எனப்படும் அதிருஷ்டமே அங்கு காற்றை யூதுமாம், ஆகை யால் அதன் மூலமானவாயுவெனபட்டது அக்காற்றென்க. வா யுவினால் வஸ்துக்களின் பரிணாமத்தால் தோன்றிய காற்றினால் ஜ்வலிக்கச்செய்யப்படும்=மற்றவற்றைப்பாகஞ்செய்யத்தக்க ஆற் றலுடையதாகச்செய்யப்படும்; அல்லது தர்மாதர்மங்களுக்கு மூலமானவாயு வெனப்பொருள் கொண்டு எல்லாகர்மங்களையுமிய ற்றியவாற்றல் கொடுக்கும் பிராணவாயுவால் என்று அதற்குரை யிடலாம். அல்லது தர்மத்தால் தோன்றுவது பிராணன், அதர் மத்தால் தோன்றுவது அபானன், எனவும் பொருளை ஏற்கலாம். இங்ஙனம் அக்கினியானால் அதற்கு ஆதாரத்துரும்பு யாதெனின்

காட்டுகின்றார் வெளியில் என்பதாதியால். வெளியக்கினிக்குக் கட்டைகளைப்போல, இச்சரீராக்னிக்கு எம்மாலேற்கப்படும் நால்வகை ஆகாரங்களும் நால்வகைத் துரும்புகளேயாம். இதனால்பிராணன்களுடன் கூடிய பித்தமென்ற அக்கினி பிராணிகள் உட்கொள்ளும் நால்வகையாகாரங்களையும் பக்குவஞ்செய்கின்றதாம், என்பது சொல்லப்பட்டது. இதனாலேயே கீதையிற்பகவான் அஹம் வைஶ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாஶ்ரித: | ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம் ||, யாம் வைசுவானரசொரூபமாய் பிராணிகளுடைய ஹிருதயத்தையடைந்துபிராணாபனங்களுடன் கலந்து, நால்வகை யாகாரங்களையும் பாகஞ்செய்வோமென்று, உபதேசித்தாரென்க.

அவதாரணிகை

இனிவினாவிடையாய் அவ்வக்கினியின்சொரூபத்தைஎடுத்துக்காட்டுகின்றார்.

ஸ ஹ்யக்நி: கதிவிதோ பவதி-

(இ—ள்) அவ்வக்கினி எத்தனைவகைப்படும்.

அவதாரணிகை

மேற்கண்ட வினாவுக்கு விடையளிக்கின்றார்.

த்ரீணி தேஹஶரீராணி
த்ரீணி காவரோதாம்ஸி
தேத்ரைவாதுர்யாஸ்தா:
த்ருயீஸ்யுத்ஸ்யோஹ்ஹ:
தேத்ராநபஸாரீரகோ
வைஶ்வாநர:

(இ—ள்) மூன்று சரீரங்கள். மூன்றல்லவோ வீரியங்கள் மூன்றுபுறங்களிலுள்ளன மூன்றுதாதுக்கள், மூன்

றுபேதமாயுள்ளது மூன்று அக்னி திரேதையென்பது சரீரத்திலுள்ள அக்னியாம். எ—று

(வி—ரை) மூன்றக்னிகள், உள்ளவெனக் குறிப்பாராய் அதற்குமூன்று ஸ்தானங்களைக்காட்டுகின்றார், மூன்றல்லவோ மூன்றுசரீரங்கள் என்பதாதியால். அம்மூன்று சரீரங்களை மேலே விரிப்பாராயினும் ஸ்தூலம் சூக்ஷ்மம் காரணமென்றதோர் மூன்றும், அதன்பொருளே. அம்மூன்றுசரீரங்கட்கும்ஹேதுவான பூத பூதசூக்ஷ்மங்களே இருக்குவிந்துக்களெனப்பட்டன, அவைகளே, மூச்சரீரங்களென்ற முப்புரங்களிலுள்ள, முத்தாதுக்களெனப்பட்டன. அற்றேல் முத்தாதுக்களிற்பிறந்தது பித்தாக்கினியும் அப்பிதாக்னியிற்பிறந்தன முத்தாதுக்களென்றால் ஒன்றையொன்றுபற்றுதலென்ற குற்றம் வாராதோவெனின் அற்றன்று. முன்பிதாவின் சரீரத்திலுள்ள பித்தம் புத்திரன் சரீரத்துமுத்தாதுக்களுக்கேதுவெனவும் ஜனனகாலத்தில்உள்ளபித்தம்மேன்மேலும் வளரும்பித்தாக்கினிக்குஹேதுவாமெனவும் கொண்டு அக்குற்றத்தைவிலக்குக. பாலினிடத்தே தயிர்சேர்ந்து தயிருண்டாமெனவும் மீண்டுமத்தயிரேபாலுடன்சேர்ந்துதயிரையுண்டாக்குமென்றால்அதற்கு உபபத்திகற்பிப்பது போல இதற்கும் கற்பித்துக்கொள்ளவேண்டுமென்க. அம்மூன்றுசாரீராக்னிகளே உபாசனைக்காகவெளியில் அக்னிஹோத்ராக்னியென்று அதுவேமூன்றுவேதமயங்களென்று கற்பிக்கப்பட்டது. ஆகையால் சரீரகாரணமான அக்னிமூன்றென்பது இம்மந்திரத்தின் மூடிந்தகருத்து.

அவதரணிகை

அவ்வக்னிமூன்றையும் தனியேபிரித்து சரீரத்திற்கதுபகாரமாகும்படி அதினிடங்களையுங் குறிக்கின்றார்.

ஙவஞஜ்ஞா நாஹ்நிஷே ஸ ஞ்ஞா நாஹ்நிஃ
கொஷ்ய ஹ்நிஸ ஹவதி॥

(இ—ள்) அது ஞானாக்னி என்றும் தர்சனாக்னியென்றும் கோஷ்டாக்னி யென்றும் மூன்றும் ஆகும். எ—று

அவதரணிகை.

அம்மூன்றக்னிகளுக்கும் ஸ்தானங்களைக்குறிக்கின்றார்.

தத்ர ஜ்ஞாநாக்³நிர்மநஸி
த³ர்ஶநாக்³நிரிந்த்³ரியேஷு
கோஷ்டா²க்³நிர்த³ஹராகாஶ இதி ॥ எ—று

(இ—ள்) அவற்றுள் ஞானாக்னிமனதிலுள்ளது. தர்சனாக்னி இந்திரியங்களிலுள்ளது கோஷ்டாக்னிதகரத்திலுள்ளது. எ—று

(வி—ரை) மனதிலுள்ளது=சங்கற்பரூபமாய் மனதில்நின்று அகப்பொருள்களனைத்தையும் உணரச்செய்வது; இந்திரியங்களிலுள்ளது=ஞானேந்திரியங்களெனப்படும் கண் முதலியபுலன்களில் வழிபுறப்பொருள்களைக்கவர்ந்து விளக்கச்செய்வது அகம் புறமென்ற விளக்கப்படும் விஷயவேற்றுமையால் இவற்றிற்கு வேற்றுமை ஏற்பட்டது; கோஷ்டாக்னி=பிரகிருதத்தில்நிரூபிக்கவேண்டிய வைசுவாநரன்; அஃது தகரத்திலுள்ளது=தகரமெனப்படும் இதயத்தாமரைக்கு சமீபத்திலுள்ளது நாபே⁴ரூர்த்⁴வம் த்³வ்யங்கு³லம் வாமபா⁴கே³ நாபியின்மேல் இரண்டங்குலம் இடதுபுறத்தில் என்பதாதியால் மேலேயதன்ஸ்தானம் குறிக்கப்படுமாதலால். எ—று

அவதரணிகை

இனியவற்றிற்குபசங்காரமுறைமைடற்றீ தொழில்களைக்கூறுகின்றார்.

ஸத³ஹிக்ருதஶீதஸ்ய
தே³ஹஸ்ய ஶோஷ்ணீக்ருதாஶயதி
ஸம்ப்ராணாபாநஸம்க்³ருஹ ॥

(இ—ள்) அம்ஃது நித்தியம் அசிதமாயும் பீதமாயுமுள்ள லேகியம், சோஷியம் முதலியவைகளை ப்ராணாபானங்களுடன் கலந்து பாகஞ்செய்விக்கும். ௭—௭

(வி—ரை.) அம்ஃது = அபேத்துக்குறிக்கப்பட்ட கோஷ்டாக்னி; நித்தியம் = நாடோறும்; அசிதம் = தின்கப்பட்டகடினவஸ்து; பீதம் = அருந்தப்பட்டதிரவகவஸ்து; லேஹியம் = நாவால்நெருடி அருந்தக்கூடியது; சோஷியம் = உறிஞ்சருந்தக்கூடியது முதலியனவென்றதால் பற்களாற்கடித்தும் நீர்போலேற்கவுங்கூடிய, காத்தியம் பேயம் இவைகள் சொல்லப்பட்டன; பிராணாபானன்களுடன்—பிராணனென்றும் அபானனென்றும வழங்கப்படும் வாயுக்களுடன்; பாகஞ்செய்விக்கும்—சரீரத்திற்குபயோகமுள்ளரஸாதிதாதுரூபமாய் ஆகாரங்களனமக்குமென்பிதாயிற்று. இப்பொருளையேசுருக்கி தைத்திரியம்கூறியது. பத்³மகோஶப்ரதீகாஶꣳ ஹ்ருத³யஞ்சாப்யதோ⁴முக²ம், தஸ்ய மத்⁴யே மஹாநக்³நிர்விஶ்வார்சிர்விஶ்வதோமுக²: | ஸோऽக்³ரபு⁴க்³விப⁴ஜந்திஷ்ட²ந்நாஹாரமஜர: கவி: | திர்யகூ³ர்த்⁴வமத⁴ஶ்ஶாயீ ரஶ்மயஸ்தஸ்ய ஸந்ததா | ஸந்தாபயதி ஸ்வம் தே³ஹமாபாத³தலமஸ்தக: இத்யத்ர தாமரைமொட்டைப்போல் குனிந்துநிற்பதுஇதயமாம் என்றுதொடங்கி, யதனடுவேயோர்பெரிய அக்னிஎங்கும் ஜ்வாலையுளதாய் எங்கும்முகமுளதாய் இருக்கின்றது. அது எப்பொருளையும் முன்னேபுஜித்து ஆகாரத்தைப்பிரித்துக்கொண்டு நித்தியமாய் பல்பொருள்களைச் சிருஷ்டிப்பதாய் இருக்கிறது. குறுக்கும் மேலும் கீழுமாய் அதன்கிரணங்கள் பரவின. கால்முதல் தலைவரைதன்தேகத்தையது தபிக்கச்செய்யுமென்பது வரை இருந்தவாக்கியத்தால்.

அவதரணிகை

இனிதர்சனாக்னியின் இலக்கணங்கூறுகின்றார்.

[illegible]

[illegible] ௭—௮

(இ—ள்) இருக்கே தெரிசனுக்னியாம் அநுவிக்கியானத்தைவிகாரமடையச்செய்யும்அறியவேண்டியதையறியச்செய்யுமென்பது.

(வி—ரை) இருக்கே= இந்திரியசக்திகளே; விக்ஞானத்தை=ஒருவகையாயுள்ள அறிவை; விகாரமடைய= குடம், படமாதிபல்ரூபம் பெறச்செயயும் விஷயங்களிற் கலந்து, தன்மயமாகி தம்மிடம் பிரதிபலிக்கும் மனம் முதற்சைதன்னிய மீறுகவுள்ள வினையப்பொருள்களையும் தன்வசப்படுத்துமாமென்பது கருத்து.

அவதரணிகை

மானசமான அக்னி ஒரேவகையுள்ளதாதலாலும் தஹராக்னியை நொப்புனின்மேல் என்பதாகியால்விரித்துநிரூபிக்கப்போகின்றாராதலாலும் அந்தர்யாகஞ் செய்யுமாத்மயாஜிகளுக்கு உபாசனைக்காகப் பெரியதோர் அர்த்தவாதத்தால் இவ்விந்திரியாக்னியை விரித்துரைப்பாராய் அதற்கு மூன்றுஸ்தானங்களுளவென நிரூபிக்கின்றார்.

தஸ்ய த்ரீணிஸ்தாநாநி ஸவந்தி
ஜதி யமொஉகாநிலவஸ்நாநி
அக்ஷுரெவாஸயஃ

(இ—ள்) அதற்கு மூன்றுஸ்தானங்களுண்டு இந்திரியகோளகங்கள் உபஸ்தானங்கள்கண்ணே ஆஸ்தானமாம்-என்று

(வி—ரை) அது தரிசனுக்னியெனச் சொல்லப்பட்டமையால் இந்திரியங்கள் அதற்கு ஸ்தானங்களாகின்றன. அவ்விந்திரியங்களுக்கு இடமாயுள்ள கண் செவி முதலிய மாம்சங்களே உபஸ்தானமாம் = அடுத்தஸ்தானமாம்:எல்லாவிந்திரியங்களிலும் அதற்கு ஆஸ்தானமெனப்பட்டது அல்லதுகாணப்படும் பொருள்களும்கண்முதலியவிடங்களுமஇந்திரியங்களுமென மூன்றுநிலைகள் அதற்குச்சொல்லலாம்இங்ஙனமாயின் கண்ணென்ற சொல்லுக்குகாணப்படும்பொருளெனப்பொருள் கொண்டு அதனை ஆகுபெயராக்கவேண்டும். ள்—து

அவதாரிகை

இனி ஆத்மயாஜிகளின் தியானயக்ஞத்தை நிரூபிக்கின்றார்.

ஹ்ருதயம் தக்ஷிணாக்நிஸ்ஸ்யாதுதரம் கார்ஹபத்யக:
முகமாஹவநீய: ஸ்யாத் யஜமானஸ்து பூருஷ: ||

(இ—ள்.) ஹிருதயத்தில் தெக்ஷிணாக்னி. வயிற்றில் கார்ஹபத்தியம் முகத்தில் ஆஹவனீயம் யாகஞ்செய்யும்புருஷன் எஜமானன். எ—று.

(வி—ரை) கிழக்கே தலைவைத்து மேனோக்கி ஓர்புருடன் படுத்திருந்தால் அவனுக்குமேற்கண்ட அக்னிஸ்தானங்கள்உள்ளபடியமையுமென்பது கருத்து. மேல்புறத்தில் "கொப்பு' ளென்பது வட்டக்குண்டமாகிய கார்ஹபத்தியம் முகம்என்பது நாற்கோணகுண்டத்திலமைந்த "ஆஹவனீயம்" மேற்கண்ட முகத்துக்கும் நாபிக்கும் நேராக இழுக்கப்பட்ட ரேகைக்குத் தென்புறத்தில் மேற்பகுதியில் அதாவது சிறிது தென்மேற்காயமைந்துள்ளது ஹிருதயமென்ற அரைவட்டக்குண்டமுடையதெக்ஷிணாக்னியாம். இது முகத்துக்கு சிறிது தூரத்திலும் கொப்புளுக்குசமீபத்திலும் இருத்தலாலும் யாகஞ்செய்யுமியல்புடைமையாலும் இதனைதெக்ஷிணாக்னி என்றது புருஷனென்பவன் சரீராபிமானி சேதனமான ஜீவனே, அவனே இங்கு யாகஞ்செய்பவனாகக்குறிக்கப்பட்டிருக்கிறான்.

அவதாரிகை

இங்ஙனம் யாகஞ்செய்பவனுக்கு மற்றையயாகாங்கங்கள் எவையென்வினநிகழ அவற்றைக்குறிக்கின்றார்.

பாஹ்யம் புத்தீந்த்ரியம் ஹ்ருஷீகம்
ஸ்ரோத்ராதீநி யாணி யஜ்ஞபாத்ராணி
கர்மேந்த்ரியாணி ஹவிஷாணி
ஸத்ரு ஸாரீர கேதனத்வேவதானவத்ஸுஜ:

𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 𑌸𑌂𑌯𑌜𑍇𑌤 𑌨 𑌚 𑌨𑌾𑌯𑌜𑍍𑌞𑍇
𑌤𑌤𑍍𑌰 𑌶𑌾𑌲𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌂 𑌶𑌿𑌰𑌃
𑌕𑌪𑌾𑌲𑌂 𑌕𑍇𑌶𑌾 𑌦𑌰𑍍𑌭𑌾𑌃 𑌮𑍁𑌖𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑍇𑌦𑌿𑌃
𑌕𑌾𑌮𑌮𑌾𑌜𑍍𑌯𑌂 𑌜𑍀𑌵𑌿𑌤𑌕𑌾𑌲𑌸𑍍𑌸𑌤𑍍𑌰𑌕𑌾𑌲𑍋
𑌦𑌹𑌰𑌨𑌾𑌦𑌸𑍍𑌸𑌾𑌮𑌘𑍋𑌷𑍋 𑌵𑍈𑌖𑌰𑍀 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿
𑌪𑌰𑌾𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍀𑌮𑌧𑍍𑌯𑌮𑌾 𑌋𑌚𑌃
𑌪𑌰𑍁𑌷𑌾𑌣𑍍𑌯𑌥𑌰𑍍𑌵𑌖𑌿𑌲𑌾𑌨𑌿 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌿
𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌯 𑌆𑌯𑍁𑌰𑍍𑌬𑌲𑌂 𑌪𑌿𑌤𑍍𑌤𑌂
𑌪𑌶𑌵𑌃 𑌮𑌰𑌣𑌮𑌵𑌭𑍃𑌥𑌃॥ 𑌇𑌤𑌿 ௧

(இ—ள்.) புத்தியைபத்தினியாக வைத்துக்கொண்டு தீக்ஷையையடைந்து யாகஞ்செய்யவேண்டும். இந்தசரீரசத்திரத்திலே ஸந்தோஷமும்ஞானேந்திரியங்களும்எக்ஞபாத்திரங்கள். கர்மேந்திரியங்கள் உபகரணங்கள். அவ்வத்தேவதைகளே ருத்விக்குகள். அவர்கள் இருந்தவிடம் விட்டசையாமலே எஜமானனைக்கலந்து அவ்வவ்விடத்தில் யாகஞ்செய்வார். அதில் சரீரமே யக்ஞசாலை குண்டம் சிரஸின் கபாலம் கேசங்களேதர்ப்பங்கள் முகம் அந்தர்வேதி காமம்ஆஜ்ஜியமாம் ஆயுள் முழுவதும் ஸத்ரகாலமாம் தகரநாதம் ஸாமகோஷமாம் வைகரி என்பது எஜுஸாம் பரை பசியந்தி மத்திமைகள் ரிக்குகள்பருஷங்கள்அதர்வணகிலங்களாம் சத்தியங்கள் வியாகிருதிகளாம் ஆயுள் பலமாம் பித்தம் பசுக்களாம் மரணமே அவபிருதமாம். எ—று

(வி—ரை) புத்தி = சிரத்தை = ஆஸ்திகபுத்தி; சந்தோஷம் = திருப்தி; எக்ஞபாத்திரங்கள் = சுருக்குசுருவம் முதலியன எக்ஞ பாத்திரங்கள், சரீரசத்திரத்திலே = சரீரத்தில்நடக்கும்சத்ரயாகத்திலே அநேக எஜமானர்கள் கூடிநடத்தும் யாகத்திற்கு சத்திரயாகமென்பது பெயர்; உபகரணங்கள் = உரல்உலக்கை முதலியவைவையாம்; அவ்வத்தேவதைகள் = அவ்வவ்விந்திரியங்களுக்குள்ளதேவதைகள் அல்லது சரீரத்தின் அங்கப்பிரத்தியங்கங்களுக்குறிய

